தமிழ் மொழியும் இலக்கியமும்

பாடப் பொழிப்பும் செயல் நெறியும்

தரம்
10-11

ஆக்கம்: கலாநிதி பொன். சக்திவேல்

விலை 120/=

BRIGHT BOOK CENTRE

BRIGHT FUTURE IN YOUR HAND

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.

S-27 FIRST FLOOR, P.O. BOX NO: 162,
COLOMBO CENTRAL SUPER MARKET
COMPLEX COLOMBO - 11. TELE: 434770

தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி

வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்

வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி

இசை கொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி

என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்

துலங்குக வையகமே

தொல்லை வினைதரு தொல்லை யகன்று

சுடர்க தமிழ் நாடே

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி

வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து

வளர்மொழி வாழியவே!

சுப்பிரமணிய பாரதியார்

முன்னுரை

தமிழ் மொழியும் இலக்கியம் செயல் நூலானது மாணவர் பாடத்திட்ட நூலை இலகுவில் புரிந்து கொள்ளவதோடு, செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் முகமாக மிக இலகுவான பகுப்பு ஆய்வில் திறம்பட தொகுத்து உள்ளோம்.

மாணவர் பாடப்பகுதியை மிக இலகுவாக புரிந்து கொள்கின்ற முறையில் நவீன கணனி உலகில் படவிளக்க, பகுப்பாய்வு விளக்கமாக பாடப் பொழிப்பை வழங்கிய தோடு, தமிழ் இலக்கிய பாடல்களை விளக்கும் பொருட்டு அவற்றினையும் நவீன ஆய்வுக்கு உட்படுத்தி வெளியிட்டு உள்ளோம். இவற்றை மாணவர் இலகுவில் புரிந்து கொள்ள உதவி செய்வதே பாடல் பொழிப்பின் நோக்காகும்.

இலக்கியப் பகுதியை மிகவும் தெளிவாகவும் இனிமையாகவும். எளிமையாகவும் புரிந்து கொள்வதற்காக தமிழ் இலக்கியம் பாட்டுக்கு பொருள், சந்தர்ப்பம் கூறல் நூல்களும் வெளிவரவுள்ளன.

இலக்கணப் பகுதியை மிக இலகுவாக்கி எளிமையாக புரியக்கூடிய முறையில் தொகுக்கப்பட்டு உள்ளது. எமது நவீன முறைமை பற்றி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கருத்துக்களை வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

கலாநிதி பொன். சக்திவேல்.

இலக்கியம் கற்பிப்பதில் உள்ள பங்கு

-பேராசிரியர்: கா.சிவத்தம்பி.

இலக்கியப் பாடத்தைப் பயிற்றுவது மட்டுமன்றி, பொதுவாக இலக்கிய ஆக்கங்களை நோக்குவதற்கும் விளக்குவதற்கும தேவையான கண்ணோட்டங்களையும் திறன்களையும் ஆசிரியர் மாணவர்களிடத்தே வளர்க்கின்றார் என்பதை ஆசிரியர்கள் எப்போதும் மனதிலிருத்த வேண்டும்.

செய்யுளின் 'பொழிப்புரை' மரபு, இலக்கிய நயப்புப் பயிற்சியில் தவிர்க்கப்பட வேண்டிய ஒரு முறைமையாகும். சிந்தனைப் பயிற்சியைக் கொடுக்காத வகையில் இலக்கியத்தைப் பயிற்றுவதால், இலக்கியத்தின் பயன்பாடு பற்றிய தவறான எண்ணப் பதிவே ஏற்படும்.

தாய்மொழிக் கல்வியில் பழைய 'இலக்கியப் பாடங்கள்' பிரச்சினை மையங்களுள் ஒன்றாக இருக்கின்றன. பண்பாட்டுத் தொடர்ச்சி, மரபுப் பேணுகை என்பவற்றுக்கான நவீன காலத்துக்கு முற்பட்ட பாடங்களையே படிப்பிக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தப் பாடங்கள் அவற்றின் காலம் காரணமாக மாணவருக்கு எளிதில் விளங்க முடியாத சொற்களினைக் கொண்டனவாகவே அமைந்துள்ளன. இந்தப் பிரச்சினையைப் புறங்காணும் முறையில் நாம் பின்வரும் விளக்க முறைமையினை மேற்கொண்டு வந்துள்ளோம்.

பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை.

முதலிற் பதங்களின் கருத்தினை அறிந்து, பின்னர் அக்கருத்தினை இலக்கண நிலைப்படக் கூட்டி, அப் பாடல் முழுவதையும் ஒரு வாக்கியம்/தொடர் ஆக்கி, அதற்கு மேல் அந்தப் பாடத்தின் பொருளை விளக்க முனைதலே நம்மிடையே இலக்கியம் பயிற்றலாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. குழந்தை, சிறுவர் மட்டத்திற் பெரும்பாலும் பதவுரை, பொழிப்புரையுடனே விளக்கம் முடிந்து விடுவதுண்டு. இலக்கியம் என்பது சொற்கள் பற்றிய மாணவனின் உணர்திறனை வளர்ப்பதேயாகும். அதாவது, அநுபவத்துடன் இணைத்து நோக்கி உணர்வு நிலையினைப் பெற்றுக் கொள்ளுதல், உணர்ச்சியினைப் புரிந்து கொள்ளுதல் என்பதே இலக்கியத்தின் உயிராக இருத்தல் வேண்டும். அந்தச் செயற்பாடு அப் பாடத்தில் வரும் சொற்களோடு ஊடாடுகின்ற பொழுதுதான் ஏற்படும். சொற்களைப் பூரணமாகப் புரிந்து கொண்ட நிலையிலேயே அது ஏற்படும். நாமோ துரதிஷ்டவசமாக இலக்கியங் கற்பித்தலை எங்கு தொடக்க வேண்டுமோ, அந்தக் கட்டத்திலே முடித்து விடுகிறோம்.

இலக்கியப் பயில்வின் கல்விநிலைப் பயன்பாடுகளை இக் கட்டத்தில் நோக்குவது நல்லது. மொழிப் பயில்வு என்னும் பெருவட்டத்தின் கீழ் வைத்து நோக்கும் பொழுது இலக்கியங்கள் கற்பித்தலுக்கு இரண்டு முக்கிய பயன்பாடுகள் உள்ளன.

(1) மொழியாட்சித் திறனை வளர்த்தல். (2) பண்பாட்டைக் கற்பித்தல்.

மாணவர்கள் ஒரு மொழியின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கான மிகச் சுலபமான வாயில் அந்த மொழியின் இலக்கியமேயாகும். ஆனால் இலக்கியங் கற்றல் என்பது இதற்கு மேலே சென்று மாணவர்கள் இலக்கியத்தை 'அநுபவிக்க' வழி வகுப்பதாகவும், அதைத் தொடர்ந்து அந்த அநுபவத்தை விளக்கும் ஆற்றலையும், அந்த அநுபவம் ஏற்படுவதற்கான காரணிகளை அறிந்து கொள்வதற்கான திறனையும் பயிற்றுவித்தலாகும்.

இதற்குத் தளமாக அமைவது மாணவர்க்கு ஏற்கனவேயுள்ள மொழித்திறன் ஆகும். தட்டுத் தடங்கலற்ற வாசிப்புத் திறனில்லாத நிலையில் இலக்கியத்தின் நுண்ணுணர்வுகளுக்குள் மாணவரையிட்டுச் செல்ல முடியாது. மொழித்திறனும் பண்பாட்டுப் பரிச்சயமும் இலக்கிய ரசனைக்கான ஆற்றுப்படைகளாகும். இலக்கியப் பயில்வுக்கு இதுவே முதற்கட்டத் தேவைகள். இந்த அடிப்படைத் தேவை நிறைவுற்ற நிலையிலேயே மாணவரின் "இலக்கிய (விளக்கப்) பதிற்குறி" மேற்கிளம்பும்.

அதன் பின்னரே நாம், ஏற்கனவே கூறிய அநுபவ விவரிப்பும், அநுபவத்திற்கான காரண விளக்கமும் இடம்பெறும்.

இலக்கியத்தைப் பயிற்றும் பொழுது குறிப்பிட்ட ஓர் இலக்கிய பாடத்தினைப் பயிற்றுவது மாத்திரமல்லாது, பொதுவாக இலக்கிய ஆக்கங்களை நோக்குவதற்கும் விளக்குவதற்கும் வேண்டுபவையான கண்ணோட்டங்களையும் திறன்களையும் ஆசிரியர் மாணவரிடத்து வளர்க்கின்றார் என்பதை ஆசிரியர் எப்பொழுதும் மனத்திலிருத்த வேண்டும். இவ்வாறு நோக்கும் பொழுது மாணவர்க்கு நாம் அளிக்கும் இலக்கியத்தின் தன்மை முக்கியமானதாகின்றது. "மானுடத்தன்மை பற்றிய புலப்பதிவுகளை வளப்படுத்துகின்ற அனுபவத்தினைத் தரத்தக்க இலக்கியப் பாடங்களையும் பாடப் பகுதிகளையும் மாணவர்க்கு வழங்கல் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அந்த வகையான இலக்கியங்கள் நமது ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களிற் பாரம்பரியமாகக் கற்பிக்கப்பெறும் பாடங்களில் இடம்பெறுவது இல்லை.

இன்றுள்ள நிலையில் அம்மட்டத்தில் போதனைச் செய்யுட்களான "வாக்குண்டாம், நல்வழி, நன்நெறி" முதலானவையே இடம்பெறுகின்றன. இவற்றைச் செய்யுட்கள் என்று கூறலாமே தவிர, கவிதைகள் எனக் கூறிவிட முடியாது.

சொற்களின் வசீகரத்தாலும், ஓசையமைதியின் கவர்ச்சியினாலும் குழந்தையின் கற்பனை தூண்டப்பெற்று, அந்த நிலையில் அது தனது மட்டத்துக்கியைய அப்பாடல் சுட்டும் அனுபவத்தினுள் உள்வாங்கப்படுவதற்கான சாத்தியப்பாடு இந்தச் செய்யுள்களிலே இல்லை. முதலாவதாக அவற்றின் மொழிநடை தற்காலச் சிறார்களின் அறிக்கை எல்லைக்குள் வருவது அன்று. இதன் காரணமாகவே நாம் பதவுரை முறைமைக்கு இறங்க வேண்டியுள்ளது. கவிதையில் வரும் 'பதத்தை' அதற்கேயுரிய பயன்பாட்டுப் பின்புலத்தில் வைத்துப் பார்த்து அப் பதத்தின் நெளிவு சுழிவுகளை விளங்கிக் கொள்ளாது 'உரைநடையில்' வைத்து விளக்கப்படும் பொழுது அந்தப் பாடலின் ஆத்ம உயிரை நாங்கள் உணர்ந்து கொள்ள முடியாது.

செய்யுளின் 'பொழிப்புரை' மரபு என ஆங்கிலத்திற் குறிப்பிடப்படுவது இலக்கிய நயப்புப் பயில்வில் தவிர்க்கப்பட வேண்டிய ஒரு முறைமை என்பதில் இலக்கிய விமர்சன அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை கிடையாது. ஆனால் நாம் நவீன காலத்துக்கு முற்பட்ட மொழி நடையுள்ள செய்யுள்களைப் பாடப் புத்தகங்களிலே திணித்துள்ளதால், இந்தப் பொழிப்புரை நடைமுறையிலிருந்து விலகிக் கொள்வதும் முடியாததொன்று ஆகிவிடுகின்றது. இலக்கியப் பாடத்தை அறிமுகஞ் செய்வதற்கு முன்னரே அந்தப் பாடத்தில் வரும் சொற்களை அறிமுகஞ் செய்து, அவற்றின் கருத்துப் பரப்பை விளக்கியதன் பின்னரே பாடத்தை அறிமுகஞ் செய்தல் வேண்டும். பெரும்பாலான ஆசிரியர்கள் அவ்வாறு செய்வதில்லை. விளங்காச் சொற்கள் காரணமாகப் பாடத்துடன் 'ஈடுபாடு' கொள்வதற்கான வாய்ப்பு இல்லாது போய்விடுகின்றது.

இலக்கியம் போன்ற பாடங்களைப் பயிற்றும் பொழுது தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்வதே பொருத்தமானதாகும். தமிழிலக்கியத்தினை எடுத்துக் கொண்டால், பாரதியிலேயே தொடங்கிப் படிப்படியாகப் பின்னோக்கிச் செல்வது (பாரதி, கோபாலகிருஷ்ண பாரதி, குமரகுருபரர், புகழேந்தி என) மாணவர்களின் அறிக்கைச் செயற்பாட்டுக்கு உதவுவதாகவும் அறிவு வளத்தை ஆழப்படுத்துவதாகவும் அமையும்.

குழந்தைகள், சிறார் மட்டத்திலே பயிற்றுவதற்காகத் தெரியப்படுபவை மிகுந்த கவனத்துடன் தெரிந்தெடுக்கப்படல் வேண்டும். 'பதவுரை' முறைமையின் தர்க்கரீதியான அடுத்த படியான 'விளக்கவுரை' செய்யப்படும் முறைமையில் இலக்கிய ரசனை என்பது புலமைகள் நடவடிக்கை என்பது மறக்கப்பட்டு கதாகாலட்சேப மரபில் வரும் விதப்புரையாகவே அமைந்து விடுகின்றது. சிந்திப்புப் பயிற்சியைக் கொடுக்காத வகையில் இலக்கியத்தைப் பயிற்றினோமேயானால் இலக்கியத்தின் பயன்பாடு பற்றிய ஒரு தப்பான எண்ணப்பதிவே ஏற்படும்.

இலக்கியம் குறிப்பாகக் கவிதை, ஆக்கபூர்வமான சிந்தனைக்கு இடம் வழங்குவது என்பது வற்புறுத்தப்படல் வேண்டும். இத்தகைய சிந்தனை ஊக்குவிப்புத்தான் புதியனவற்றைக் கண்டுபிடித்தலுக்கான ஆரம்பநிலை என்பதையும் மறந்து விடக் கூடாது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கான கற்பனைகள் இலக்கியம் மூலமே வருவதை நாம் விஞ்ஞானப் புனைகதைகள் மூலம் அறிந்துள்ளோம். ஆர்தர் கிளார்க்கின் நாவல்களிற் கூறப்பட்ட கற்பனைகளே இன்று தொடர்பியலில் முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும் மாணவர்களின் உணர்ச்சி முதிர்வுக்கு இலக்கியம் பெரிதும் உதவுகின்றது என்பதை நாம் மறந்து விடுதல் கூடாது. நாம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை யாதெனில் இந்த உண்மைகளையும், தேவைகளையும் உள்ளடக்கியனவாக அமையும் ஓர் இலக்கியக் கற்கை நெறியினை எவ்வாறு வகுத்துக் கொள்ளலாம் என்பதே. அவ்வாறு வகுத்துக் கொ்ண்ட பின்னர், அந்தக் கற்கை நெறியைப் பயிற்றுவிக்கும் ஆசிரியருக்கு நாம் வழங்க வேண்டிய கற்பித்தல் முறைமை பற்றிச் சிந்திப்பது அவசியமாகும்.

-நன்றி: தினகரன்.

1. உவமை நயம்

1.1. பாடப் பொழிப்பு

உவமைக்கு இலக்கணம்

அறிந்ததைக் கொண்டு அறியாததை விளக்கல் ஆகும்.

மனிதனுடைய அறிவு விரிவதற்கேற்ப உவமையைக் கையாளும் திறன் வளர்ச்சியடைகிறது. அறிவுத் திறத்தையும் அனுபவத்தின் ஆழத்தையும் வெளியிடும் கருவியாக உவமை அமைந்து விட்டது.

இதனால் தான் மொழி இலக்கணம் கூறும் தொல்காப்பியனார் உவமை இயல் எனும் தனிப் பகுதியையும் எழுதியுள்ளார்.

உவமை உருபுகள் நூற்றுக்கணக்கில் தமிழ் மொழியில் நிறைந்து கிடக்கின்றன.

உவமையின் பல்வேறு வடிவங்கள்

சங்ககாலம் முதல் பாரதியார் வரை தமிழ் இலக்கியங்களில் உவமை பல்வேறு வடிவங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

உவமை தோன்றும் இடங்கள்

வினை, பயன், மெய், உரு என்ற நான்கு பற்றியும் உவமை தோன்றும்.

கம்பர்

எல்லாக் கவிஞர்களும் உவமை, உருவகங்களை பயன்படுத்தியுள்ளனர். கம்பர் நான்கு வகை உவமானங்களையும் தனது கவிதைகளுள் பாவித்துள்ளார். ஒரு புலவரின் சிறப்பை அறிவதற்கு அவர் கையாளும் உவமை ஒன்றே போதுமானதாகும்.

சிறந்த கவிஞன்

தொடர்பற்ற பொருள்களினிடையே ஒப்புவமையைக் காண்பதோடு நம்மையும் காணுமாறு செய்கிறான். இதனாலேயே அவனுடைய புலமைச் சிறப்பு வெளிப்படுகின்றது.

'தருமத்தின் வதனம் எனப் பொலிந்தது தனி வெண் திங்கள்'

எனும் கவி வரி மூலம் கம்பன்

தருமத்தின் முகத்தைப் போன்று இருந்தது சந்திரன் எனப் பகர்கின்றார்.

கம்பர் இராமரைச் சித்தரிக்கின்ற போது

'சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்'

என்பது மூலம் சிரிக்கின்ற இயல்பினை தாமரைப் பூவின் மேல் ஏற்றி, அதனை நமது உள்ளத்தில் புகுத்தி இராமருடைய கண்களில் மலர்ந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

கவிச்சக்கரவர்த்தி கம்ப நாடன்

இலக்குவனாம் தம்பியோடும் மிதிலை பெண்ணாகிய ஜானகியோடும் இராமன் காட்டில் நடந்து செல்லும் காட்சியை வர்ணிக்கும்போது,

'மையோ, மரகதமோ, மறி கடலோ, மழை முகிலோ'

என்பது மூலம்

அழகின் முழுமையையும் தன்னால் கூற முடியவில்லை என்ற உண்மையை உணர்கிறான்.

"ஐயோ! இவன் வடிவு என்பதோர் அழியா அழகு உடையான்"

எனக் கூறுவதன் மூலம் கவிஞர் தனது ஆற்றாமையைத் தெரிவிக்கின்றார்.

இரக்கக் குறிப்பான "ஐயோ" எனும் சொல் மூலம் ஒப்புவமை இல்லாத தனிச் சிறப்பை கவிஞர் கூறுகின்றார்.

தொல்காப்பியத்தில்

"உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை"

என்பது மூலம் உவமை சொல்லும் போது உயர்ந்த பொருள்களோடு ஒன்றை உவமிக்க வேண்டுமே ஒழிய, தாழ்ந்த பொருளோடு உவமித்தல் ஆகாது என்பதே கருத்தாகும்.

எங்காவது ஓரிடத்தில் கவிஞன்

தாழ்ந்த உவமையை கையாளுவானாயின் அதற்கு தனிக்கருத்து இருத்தல் வேண்டும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன்

மிக உயர்ந்த பாத்திரமான இலக்குவன் கூற்றில் தாழ்ந்த உவமையைக் கையாளுகின்றார்.

தமயனுக்குக் கிடைக்க வேண்டிய முடியை, சிற்றன்னை ஏமாற்றி பறித்து விட்டாள் என்ற எல்லையற்ற கோபத்தில்

"மூட்டாத காலக் கடைத் தீ"

மேல் உலகத்தையே சுட்டெரிக்கக்கூடியதாய் நின்ற நிலை கண்டு இராமன் மனம் வருந்தி இலக்குவன் கொண்ட கோபம் தவறானது என்று பேசுகிறான்.

"உழையா அறம் வற்றிட ஊழ் வழுவுற்ற சீற்றம்
விளையா நிலத்து, உனக்கு எங்ஙன் விளைந்தது?"

இவ்வளவு கோபத்தில் கொதித்தெழுந்த இலக்குவன் பேசுகின்ற பேச்சுக்கள் மிகத் தாழ்ந்த மனநிலையில் உள்ள ஒருவன் பேசுகின்ற பேச்சுக்களாகவே அமைந்து விட்டது.

"வாய் தந்தன பேசுதியோ, மறை தந்த நாவால்"

"வேதத்தை ஓயாது பாராயணம் செய்கின்ற திருவாயால், வழங்கத் தகாத வார்த்தைகளை நீ பேசலாமோ?" எனும் இராமனின் கூற்றுகள், இலக்குவனுடைய மனோநிலை கோபங் காரணமாக தாழ்ந்த நிலைக்குச் சென்று விட்டதை உணர்த்துகிறது.

இலக்குவன் பேசிய பேச்சாக கம்பர் கூறுவது

"சிங்கக் குருளைக்கு இடுதீம் சுவை ஊனை, நாயின், வெங்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினாளே!"

(கம்பன் 1718)

பரதனை
விஸ்வாமித்திரனை அறத்தின் அணி
"ஆயிரம் இராமர்கட்கும் மேம்பட்டவன்" என்கிறார்.

இராமனின் தாய் கோசலையால்
"தள்ளரிய பெரு நீதித் தனி ஆறு புக மண்டும் வெள்ளம்"
எனப் புகழப் பெற்ற பரதனை,
இலக்குவன்
"வெங்கண் நாயின் சிறு குட்டன்"
எனப் பேசுவது மன்னிக்க முடியாத பெருந் தவறாகும்.
எனவே தான், கவிச்சக்கரவர்த்தி, இந்த உவமையை இலக்குவன் கூற்றாக கையாளுகின்றார். வேறு எந்த உவமையைக் கையாண்டும் இலக்குவன் மனநிலையை வெளிக் கொணர முடியாது.

இத்தகைய அற்புதமான உவமையை கையாளுவதன் மூலம் கவிச்சக்கரவர்த்தி இலக்குவனனுடைய தாழ்ந்து விட்ட மனநிலையைக் காட்ட முடிந்தமை மூலம் கவித்திறத்தையும் உலகிற்குக் காட்டுகின்றார்.

1.2. செயல் நெறி

I. பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) 'உவமை' என்ற பதத்திற்குச் சொல்லப்படும் இலக்கணம்
 அ) பொருட்களின் சொற்களைப் பிரித்தல்.
 ஆ) அறிந்ததைக் கொண்டு அறியாததை விளக்கல்.
 இ) அறிந்தவற்றுள் அறியாததைப் புகுத்துதல்.

2) 'உவமையியல' என்ற ஒரு தனிஇயலை எழுதியவர்,
 அ) தொல்காப்பியனார்.
 ஆ) கவிச்சக்கரவர்த்தி.
 இ) கம்பராயர்.

3) புலவர் ஒருவரின் சிறப்பை அறிவதற்குக் காரணமாவது,
 அ) புலவரின் பொருள் நயம்.
 ஆ) புலவர் கையாளும் உவமை.
 இ) புலவரின் உண்மை பேசும் தன்மை.

4) 'சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன' இதன் பொருள்,

அ) இராமபிரானுடைய கண்கள் சிரித்த தாமரை போன்றிருந்தன.

ஆ) இராமபிரானுடைய கண்கள் கூம்பின தாமரை போன்றிருந்தன.

இ) இராமபிரானுடைய கண்கள் மலர்ந்த மகிழ்ச்சியுடையதாக இருந்தன.

5) வாய் தந்தன பேசுதியோ, மறை தந்த நாவால் என்பது,

அ) உனக்கு வாய் தந்தது நல்லவற்றைப் பேசுவதற்காகவே.

ஆ) வேதத்தைப் பாராயணம் செய்கின்ற வாய் மிகவும் நல்லது.

இ) வேதத்தைப் பாராயணம் செய்கின்ற வாயால் தகாத வார்த்தை பேசலாமா?

2. புள்ளிக் கோடிட்ட பகுதியைப் பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.

1) மரப்பொந்தை பற்றிக் கொண்டு விடாத .... போல.

1) பாம்பு 2) குரங்கு 3) உடும்பு 4) மந்தி

2) "உயர்ந்தன மேற்றே உள்ளும் காலை" என்பது ....

1) திருக்குறள் 2) தொல்காப்பியம் 3) மகாபாரதம் 4) கம்பராமாயணம்.

3) 'சிரித்த பங்கயம்' என்பது இராமனுடைய எந்த உறுப்பிற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?

1) முகம் 2) வாய் 3) கண் 4) நெற்றி

4) அறிவுத் திறத்தையும், அனுபவத்தின் ஆழத்தையும் வெளியீடும் கருவியாக அமைவது..........

1) இலக்கணம் 2) உவமை 3) உருபுகள் 4) தனிஇயல்.

4) நான்கு வகை உவமானங்களாகக் கூறப்படுவது..

1) மெய், வாய், கண், மூக்கு 2) வினை, தினை, பனை, மெய்.

3) வினை, பயன், மெய், உரு 4) வினை, மெய், கண், உரு.

3) பின்வரும் சொற்களுக்கு உவமானம் எழுதி, கருத்தையும் தருக.

உ+ம்: தேன்மொழி – தேன் – உவமானம். மொழி – உவமேயம்.

1) சிரித்த பங்கயம் –

2) அறத்தின் அணி –

3) கமலக்கண்ணன் –

4) வெண் திங்கள் –

5) செங்கண் இராமன் –

4) பின்வரும் உவமைத் தொடர்களுக்கு கருத்தை வைத்து வசனம் எழுதுக.

1) இருதலைக் கொள்ளி எறும்புபோல

....

2) குளிக்கப் போய் சேறு பூசியது போல

....

3) அனலிடைப்பட்ட புழுப் போல

....

4) சூரியனைக் கண்ட தாமரை போல

....

5) மடை திறந்த வெள்ளம் போல

....

5) கீழ்க்காணும் பாடல் வரிகள் எந்த வேளையில் பாடப்பட்டதை விளக்குகின்றது என்பதையும் கருத்தையும் எழுதுக.

1) "தருமத்தின் வதனம் எனப் பொலிந்தது தனி வெண் திங்கள"

சந்தர்ப்பம்: ....

கருத்து: ....

2) "மையோ, மரகதமோ, மறிகடலோ, மழை முகிலோ"

சந்தர்ப்பம: ....

கருத்து: ....

3) "சிங்கக் குருளைக்கு இடுதீம் சுவை ஊனை, நாயின்
வெங்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினாளே"

சந்தர்ப்பம: ....

கருத்து: ....

2. கவிதை உள்ளம்

2.1. பாடப் பொழிப்பு

நாம் வெள்ளை முகில்களோடு மிதக்கலாம். வீசுகின்ற குளிர்ந்த காற்றுகள் உடனும், தளிர்களுக்கு மென்மை ஊட்டுகின்ற கவிதைகளுடனும், தம்முடைய உணர்வுகளை கூ.... கூ... என்கின்ற பசும் கிளைகளில் உள்ள குயில்களுடனும், தண்ணீரும் தண்ணீரும் போல கலந்து உறவாடலாம்.

கொட்டைப் பாக்களவுடைய சின்ன சிட்டுக்குருவிகளுடன் நாம் ஒட்டலாம்; நீண்ட ஊசி போன்ற மூக்குடைய குருவிகளோடு சேர்ந்து மொட்டாக உள்ள மலர்களில் தேனைக் குடிக்கலாம். இழைகளைப் பின்னுகின்ற பட்டுப் பூச்சிகளோடும் பல கதைகள் பேசலாம்.

மல்லிகைப் பூவில் நெஞ்சம் மகிழலாம். அடுத்த தெய்வத்தின் மேன்மையை உணரலாம். செவ்வந்தியின் அமைவில் தூய்மை அடையலாம், மணத்தைக் கொடுக்கின்ற முல்லை மலர் சூடிய காதற் பெண்களின் சிரிப்பைக் காணலாம்.

குழந்தையின் சிரிப்பை பார்த்து நெஞ்சம் பூரிக்கலாம். அதிகாலைப் பொழுதில் விழுகின்ற பனித் துளிகளில் புல்லின் விளிம்பினில் தரையில் குந்தியெழுகின்ற புள்ளினங்களின் வண்ண இறக்கையின் துடிப்பில் நெஞ்சம் தளம்பலாம். அவற்றில் இன்பத் தனிச்சுவை காணலாம். இயற்கையின் அசைவுகள் மூலம் இன்பத்தை நுகரலாம். விண்ணகத்து வயல்களில் உலக வாழ்வின் மறைபொருள் தெளியலாம். அயலவர் துயரில் பங்கு கொள்ளலாம். வாழ்வின் கயமைகள் அழிய நாம் ஒரு காவியம் கூடப் பாடலாமே.

2.2 செயல் நெறி

1) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து கோடிடுக.

1. நெஞ்சம் குழையல், நெஞ்சம் தழும்பல் என்பவற்றை ஏற்படுத்துவது ,
   1) குழந்தை 2) இயற்கை 3) புல்வண்ணம்
2. மொட்டலர் மலரில் தேனை முகரலாம்; இதில் முகரல் என்பது,
   1) குடித்தல் 2) மணத்தல் 3) உறிஞ்சுதல்.
3. 'காவியம் பாடலாம்' என்பதில் காவியம் எதனைக் குறிக்கிறது?
   1) கவிதை 2) சரித்திரம் 3) காப்பியம்.
4. 'கவிதை உள்ளம்' செய்யத் தூண்டும் செயல்,
   1) அயலவர் துயரில் பங்கு 2) கடலில் நீந்துதல் 3) வானில் பறத்தல்.
5. ஊசி மூக்கு உள்ள படைப்பினங்களுள் ஒன்று,
   1) பச்சோந்தி 2 கடல்மீன் 3) சின்னக்குருவி.

2) பின்வருவனவற்றுக்கு ஒத்த கருத்துத் தருக.

1) உணர்வு
2) முகரலாம்
3) காவியம்
4) விண்
5) விளிம்பு
6) மறுகால்
7) செறிவு
8) பசுங்கிளை
9) நுகரல்
10) கயமை

3) பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக.

1) அயலவர் .... பங்கு அடையலாம்.
   1) கடலில் 2) மகிழ்வில் 3) துயரில்.
2) குழந்தையின் சிரிப்பில் நெஞ்சம் ....
   1) மகிழலாம் 2) கழிக்கலாம் 3) குழையலாம்.
3) உலக வாழ்வின் மறைபொருள் ....
   1) அறியலாம் 2) மறைக்கலாம் 3) விளக்கலாம்.
4) இயற்கையின் துடிப்பில் .... தளம்பலாம்.
   1) மனது 2) அகம் 3) உடல்.
5) புல்லியின் அமைவில் .... அடையலாம்.
   1) சுத்தம் 2) சுகம் 3) இரக்கம்.

4. பின்வரும் சொற்களுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

1) ஊசி மூக்கு. ....
2) வீண் வயல். ....
3) மொட்டலர் மலர். ....
4) தண்ணிய தென்றல். ....
5) புல்லின் விளிம்பில். ....

5. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) எவற்றினோடு பலகதை பேசலாம் எனக் கவிஞர் கூறுகிறார்?
....
2) இயற்கையின் அசைவு தோறும் எதனை அனுபவிக்கலாம்?
....
3) உலக வாழ்வின் மறைபொருள் அறிய நாம் என்ன செய்ய வேண்டும்?
....
4) இக் கவிதைகள் மூலம் நீர் எதனை உணர்கிறீர்?
....
5) இதே போல் ஒரு கவிதை ஒன்றை இயற்ற முடியுமா? முடியுமாயின் இயற்றுங்கள்.
....
....

3. இளையான் குடிமாற நாயனார் புராணம்

3.1 பாடப் பொழிப்பு நூலில் தரப்பட்டுள்ளது.

3.2 செயல் நெறி

1) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பெரியபுராணத்தை இயற்றியவர்.
   1) அந்தணர் 2) சீதக்காதி 3) சேக்கிழார் 4) கம்பர்
2. இளையான்குடி என்னும் சிவத் தலத்தில் திருவவதாரம் செய்தவர்.
   1) இளையான் 2) மாற்றினார் 3) திருச்சிற்றம்பலம் 4) மாறனார்.
3. வரம்பிலா நிதியும் நீர் வளமும் பெற்று விளங்கிய சடாமுடி தாங்கியவர்.
   1) குடிமாறநாயனார் 2) சிவபெருமான் 3) மாறனார் 4) நடராச பெருமான்.
4. தேவர்களின் தலைவராக விளங்குபவர்.
   1) நடராசப் பெருமான் 2) நாயனார் 3) பெருமான் 4) நாயகர்
5. ஒப்பில்லாத விருந்தினரை இங்கே எழுந்தருளச் செய்து திருவமுது செய்விப்போம் என்று கூறியவர்.
   1) குடிமாறநாயனார் 2) நடராசப் பெருமான் 3) மாறனாரின் மனைவி 4) பத்தினி.

2) விடை எழுதுக.

அ) இளையான் குடிமாற நாயனாருக்கு பேரின்பத்தை வழங்கியவர் யார்?

....

ஆ) இளையான் விருந்து கொடுத்த விதத்தை எழுதுக.

....

இ) இளையான் குடிமாற நாயனார் புராணத்தை இயற்றியவர் யார்?

....

ஈ) மாறனார் திருவவதாரம் செய்தது எதனால்?

....

உ) இப்புராணத்திலிருந்து நீர் கற்ற பாடம் எது?

....

3. பின்வருவன யாரால், யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது என எழுதுக.

1) "தீர வேபசித் தார்செய்வ தென" என்று

....

2) "இணையிலா தாரை ஈண்ட அமுதுசெய் விப்போம"

....

3) "அன்பனே! அன்பூர் பூசை அளித்த நீ அணங்கி னோடும் என் பெரும் உலகை எய்தி இருநிதிக் கிழவன் தானே"

....

4) நடராசப் பெருமானின் திருவிளையாடல் பற்றி சிறு கட்டுரை வரைக.

5) பின்வருவனவற்றிற்கு கருத்தெழுதுக.

1) "அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கி னோடும்
என்பெரும் உலகை எய்தி இரு நிதிக் கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க" என்றே அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்.

கருத்து: - ....

....

2) "அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால் எழுந்தருள் பெரியோய்! ஈண்ட அமுது செய்தருள்க"

கருத்து: - ....

....

3. "கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி இணையிலா தாரை ஈண்ட அமுது செய்விப்போம்"

கருத்து: - ....

....

6) பின்வரும் பாடலின் கருத்தை உமது உரைநடையில் எழுதுக.

அன்பனே! அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
எம்பெரும் உலகை எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்.

கருத்து: – ....

....

4. பின்வருவனவற்றிற்கு சரியான ஒத்த கருத்தைத் தருக.

1) வரம்பு –		6) புனலிடை –	
2) பக்தி –		7) எண்ணி –	
3) ஏர் –		8) பக்தன் –	
4) துயில் –		9) நுகர்ந்து –	
5) பத்தினி –		10) பேரின்பம் –	

4. இருட்டறை

4.1. பாடப் பொழிப்பு

இருட்டினால் சகீனாவின் அறை இருளடைந்து கிடந்தது. சகீனா யோசித்துக் கொண்டிருந்தாள்.

சகீனா அறுபது வருடங்களாக வாழ்ந்து வருகிறாள். நாளை என்பது நிச்சயமில்லை எனும் உலகத்தில் அறுபது வருட காலம் வாழ்ந்து விட்டோம் எனப் பெருமைப்பட்டாள். வாழ்க்கையில் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் சக்தியுள்ளது என்பதில் தலை நிமிர்ந்து நடந்தவள் அவள். அவளுடைய பெருமிதத்திற்குக் காரணம்;

இந்த உலகத்தில் அறுபது வருட காலம் வாழ்ந்து விட்டோம் எனும் நம்பிக்கை; மற்றது மகன் ரஸாக் இருக்கிறான் எனும் தைரியம்.

ஆனால், எந்த நம்பிக்கையில் வாழ்ந்தாளோ, அந்த நம்பிக்கையிலேயே மண்ணை அள்ளிப் போட்டு விட்டான் மகன். அதிலே வேதனையோடு ஏமாற்றமும் வழிந்தது.

வாழ்க்கை அர்த்தமற்றது ஆகிவிட்ட நிலை.
யாருக்காக உலகத்தில் வாழ ஆசைப்பட்டாளோ, யாருடைய தைரியத்தை ஊன்று கோலாகக் கொண்டு வாழ்ந்தாளோ, அந்த மகன், அவளுடைய வாழ்க்கையை அர்த்தமற்றது எனவும் அவள் உயிரோடிருந்த அறுபது வருட வாழ்க்கையையும் வெட்ட வெளியாக்கி விட்டான்.

மகன் சொன்ன வார்த்தை, தந்தி அறுந்த வீணை போல் சுருதி இல்லாமல் போய் விட்டது. அவன் சொன்ன வார்த்தைகள் உள்ளத்தில் கோடு கிழித்துக் கொண்டிருந்தது. எதை மறக்க முயன்றாளோ அதே எண்ணங்கள் செக்குமாடு போல சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தன.

"போறன் உட்டுட்டு வேலையைப் பாரு" என அவள் மனத்திற்கு கட்டளையிட்டாள். மனம் விடுவதாக இல்லை. அது எதிர்நீச்சல் அடித்துக் கொண்டிருந்தது. "அப்படி என்னத்தை தான் சொல்லி விட்டாள்?" இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை.

"என்னடா தம்பி! நேரங்காலத்தோட ஊட்டுக்கு வந்துட்டா?" என்று கிழவி கேட்டாள்.

"வராம என்ன செய்யச் சொல்றா? மாடு மாதிரி ஒழைச்சாலும் புண்ணியமில்லை."

ரஸாக் அலுப்போடு சொன்னான். அதில் கோபமும் கலந்திருந்தது.

"ஏண்டா தம்பி கோபம்? யாருக்கிட்டயாச்சும் சண்ட கிண்ட போட்டுக்கிட்டு வந்தியோ" எனக் கிழவி கேட்டாள்.

"சண்டையா? அவன் மண்டய ஒடச்சிருப்பாங்கா தப்பிட்டான்."

"மாட்டுக்கும் மனிசனுக்கும் வித்தியாசம் தெரியாதவன்" என்று கத்தினான்.

"ஏண்டா என்ன நடந்திச்சு?"

"என்ன நடக்கிறதா? அவன்ட மாடு வெயிலில நிண்டுச்சாம்.

வாணத்துக்குக் கிளம்பறான்?"

"அவன்ட கொணந்தான் தெரியுமே! நீயென்னத்துக்கு அவன் மாட்ட வெயிலில உட்ட?"

"அவன்ட கொணம் அவன்ட ஊட்டுல இருக்கட்டும்கா.

மாடு தானா பெரிசு? நானும்தான் விடிஞ்சா பொழுதுபட்டா வெயிலில கெடக்கிறன். என்னைப் பத்தி யோசிச்சானா?"

"உம் ... நீ உலகம் தெரியாத புள்ள, யாரப் பத்தியும் யாரும் கவலப்பட மாட்டாங்க. நம்மப்பத்தி நாமதான் கவலைப்படணும், வயிறொன்று இருக்கிறதே!"

"வயித்தப்பார்த்தாப் போதுமா? மானத்தை காப்பாத்த வேணாமா?" என்று கத்தினான் ரஸாக். "கோவம் பசிய ஆத்தாதுடா தம்பி! நீ யென்ன செய்வா, ஒனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான் என்றாள்" கிழவி.

"ஓ! ஒனக்கு எல்லாம் தெரியும்." அலுத்துக் கொண்டான் ரஸாக்.

"இன்னொரு தரம் சொல்லுடா மகனே! நானென்ன ஒலகம் தெரியாதவளா?" கிழவி கொஞ்சம் பெருமிதத்தோடு கேட்டாள்.

"ஒலகம் தெரிஞ்சதுனால தான்கா ஒனக்கு இந்தக் கேடு" ஒரு வெறுப்போடு சொன்னான் ரஸாக். கிழவி தலையைத் தூக்கி மகனைப் பார்த்து விட்டுச் சொன்னாள்,

"எனக்கென்ன கேடு வந்துட்டுதா? இந்த ஒலகத்தில அறுவது வருசம் சீவியம் செஞ்சிட்டன்! ஒன்னப் போல கொழந்தயா நான்?" இறுமாப்போடு கேட்டாள் கிழவி.

கிழவியுடன் பேசி முடிவுக்கு வர முடியாது என எண்ணிய ரஸாக், துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கேட்டான்.

'ஒலகம் தெரிஞ்ச மாதிரி பேசுறியே, ஒண்ட முகம் உனக்குத் தெரியுமாகா?'

அவன் கேட்ட கேள்வி அவள் மனதை உலுக்கி விட்டது. அறுபது வருடம் உலகில் வாழ்ந்து விட்டேன் என நம்பிக்கை கொண்டிருந்தவளுக்கு, மகன் கேட்ட கேள்வி ஒரு பெரும் தாக்குதல் தான். அந்த தாக்குதலில் அவள் உயிர் நாடி தளர்ந்து விட்டது. கிழவியின் மனம் வாழ்க்கையின் ஆரம்பத்திற்கு சென்றது.

சகீனா, குழந்தையாக இருக்கும் போது, கண்ணாடி பார்த்த போது அவளது தாயார் 'பொண்ணாப் பொறந்தவள் கண்ணாடி பார்க்கக் கூடாதுடி!" என்று சொன்னாள்.

ஏனும்மா என்று அழுது கொண்டே கேட்டாள். சொன்னாக் கேளு ஆகாததென்டா ஆகாது தான் எனக் கத்தினாள்.

அதன் பின், ஆகாது என்ற காரியத்தை ஒரு நாளும் அவள் செய்தது கிடையாது. அது மட்டுமல்ல, எத்தனயோ காரியங்கள் ஆகாது என்ற காரணத்தால் அவள் வாழ்க்கையை விட்டு விலகிப் போய்விட்டன. எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்க வெறும் சூனியமாய் இருந்தது அவளுக்கு.

உலகத்தையும் அதன் போக்கையும் அவள் ஒரு நாள் கூட எண்ணிப் பார்க்கவில்லை. குடிசையை சுற்றி இருந்த அந்த தட்டு வேலிக்குள் அறுபது வருட வாழ்க்கையை கழித்திருக்கிறாள்.

காலத்தையும் அதன் மாற்றத்தையும் உணராது ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தாலும் அர்த்தமற்ற வாழ்க்கைதான். வாழ்க்கை ஏமாற்றப்பட்டதை எண்ணி அவள் உள்ளம் விம்மியது.

உலகமும் அவள் வரையில் இருட்டுக்குள் தான் இருந்தது.

4.2 செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கண்ணாடியைக் கூர்மையாகப் பார்த்தாள் சகீனா! அந்தக் கண்ணாடிக்குள் இருந்து ஒரு குழந்தை சகீனாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. தன்னைப் போல் ஒரு குழந்தை அந்தப் பெட்டிக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருந்தது, பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது சகீனாவுக்கு. பெட்டியை எடுத்துக் கொண்டு தாயிடம் ஓடி "உம்மா! இங்கப் பாருங்க, இதுக்குள்ள ஒரு புள்ள" என்று சொல்லிக் கண்ணாடியைப் பார்த்தபடி, கூத்தாடினாள். இதைப் பார்த்த தாயார் கண்ணாடிப் பெட்டியைப் பறித்துக் கொண்டாள். தன்னுடைய மகிழ்ச்சியைப் பறித்துக் கொண்ட தாயாரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் சகீனா. அழுகை வெளிக்கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

1) கண்ணாடிக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருந்த குழந்தை யார்?

....

2) சகீனாவிற்கு கண்ணாடியிலிருந்த உருவம் தெரியாமல் விட்டதற்குக் காரணம் யாது?

....

3) அவள் என்ன சொல்லிக் கூத்தாடினாள்?

....

4) குழந்தைக்கு உள்ள ஒத்த சொற்கள் மூன்றினைத் தருக?

....

5) இப்பந்தியிலிருந்து நீர் புரிந்து கொண்ட விடயம் யாது?

....

2. பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துத் தருக.

1) இருட்டறை – ....
2) மறுகாரியம் – ....
3) தலைமுறை – ....
4) சிந்தனை – ....
5) குறைச்சல் – ....
6) பெருமிதம் – ....
7) எண்ணங்கள் – ....
8) எதிர்நீச்சல் – ....
9) தொல்லை – ....
10) வேள்வி – ....

3. பிழையாக உள்ள சொற்களை சரியாக எழுதுக.

1) கொறைச்சல் – ....
2) போறான் – ....
3) ஊட்டுக்கு – ....
4) ஒழைச்சாலும் – ....
5) சீவிச்சிட்டா – ....
6) அறுவது – ....
7) திம்மான் – ....
8) போயில – ....
9) சொல்ரா – ....
10) மண்டய – ....

4. பின்வருவனவற்றுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

	உவமானம்	உவமேயம்
1) விளக்கேற்றி	....	....
2) இருந்து மடிந்து	....	....
3) தலை நிமிர்ந்து	....	....
4) மண்ணையள்ளி	....	....
5) நேரங்காலம்	....	....

5. பின்வரும் அரும்பதங்களை வைத்து வசனம் அமைக்குக.

1) இருப்புலக்கை : ....
2) ஆள்காட்டி : ....
3) தலைமுறை : ....
4) குருட்டுத்தவம் : ....
5) தலைநிமிர்ந்து : ....

6. கீழ்க்காணும் சொற்களின் சரியான தமிழ் வடிவம் யாது?

1) ஊட்டுல ....
2) ஒலகம் ....
3) ஒனக்கு ....
4) கொழந்தயா ....
5) நிண்டுச்சாம் ....
6) கெடக்கிறேன் ....
7) வயித்தப் ....
8) ஆத்தாதுடா ....
9) கூடாதுடி ....
10) ஆகாதென்டா ....

5. மலையகமும் தமிழ் இலக்கியமும்

5.1 பாடப் பொழிப்பு

பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கியோர்

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு மலிவான கூலிகளாக கொண்டுவரப்பட்ட தமிழ்த் தொழிலாளரும் அவர்தம் வம்சாவழியினரும் இந்நாட்டவர் உண்ணும் உணவில் தங்கள் உதிரத்தை கலந்து விடுமளவுக்கு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றனர்.

இவர்களது வாழ்வில்

அறியாமையும், அந்தகாரமும் சூழ்ந்து காணப்படுகிறது. இம்மண்ணில் நிகழும் அவர்தம் வாழ்வு இந்நாட்டு இலக்கியத்தின் பரிமாணங்களையும் பெருக்கியுள்ளது. மலையக தமிழரிடையே பிறந்த இலக்கியங்கள் இந்நாட்டு மண்ணோடு பிணைந்து கிடக்கின்றன.

நான்காவது தசாப்தம் முடியும்வரை

மலையகத்தில் வெகுசிலரே படிப்பறிவு பெற்றிருந்தனர். இலங்கைப் பத்திரிகை துறையும் வளர்ச்சி பெறவில்லை. இந்திய பத்திரிகைகள் வசதியுள்ள ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்தன. ஆர்.இராமையா, சி.சுப்பிரமணியம், வெற்றிவேல் கவிராயர் போன்ற சிலர் இந்திய சஞ்சிகைகளுக்கு ஆத்மீக சம்பந்தமான கட்டுரைகளும் கவிதைகளும் எழுதினர். மலையகத்தில் மாரியம்மன் தாலாட்டு, யாத்திரைப் பாடல்கள், காமன் கூத்து முதலிய ஆடல் பாடல் பிரசித்தமாயிருந்தன.

இந்திய – இலங்கை போக்குவரத்து

கட்டுப்பாடு இன்மையால் இந்தியாவிலிருந்து நாடகக் குழுக்களும் புலவர்களும், பாடகர்களும், இந்திய விடுதலை இயக்கத்திற் சம்பந்தப்பட்டோரும் வந்து போயினர். காந்தி, தாகூர், பாரதி, நாமக்கல் கவிஞர் முதலியவர்களின் கருத்துக்களும் பாடல்களும் மலையகத்தில் பரவின.

சிறு பிரசுரங்களாக விற்கப்பட்ட நூல்கள்

பாரதியார் பாடல், அண்ணாமலைச் செட்டியார் காவடிச் சிந்து, சங்கரதாஸ் சுவாமிகளின் கீர்த்தனங்கள், தெய்வீகப் பாடல்கள், நாவலப்பிட்டி பெரியாம்பிள்ளை, கந்தசாமி கணக்கு பிள்ளை முதலியோர்களினால் இயற்றப்பட்டு சிறுபிரசுரங்களாக விற்கப்பட்டன.

1940 முதல் கல்வியானது ஓரளவு

கீழ்மட்டத்திற்கும் பரவியது. தொழிலாளர் இயக்கரீதியாக ஒன்றுபட்டனர். தமிழ்ப் பத்திரிகை துறை வளர்ச்சியுடன் ஆனந்த விகடன், கல்கி போன்ற தமிழ் சஞ்சிகைகள் மக்களிடையே பரவின. சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி சகாப்தமும், அதனது தலைமகன் புதுமைப்பித்தன் இலங்கை தேயிலை தோட்ட தொழிலாளர் வாழ்வின் அவலங்களைச் சித்தரிக்கும் "துன்பக்கேணி" என்ற கதையினை எழுதியதும் இங்கு நோக்கத்தக்கது.

சி.வீ.வேலுப்பிள்ளையின் நாவல்கள்

வீடற்றவன், வாழ்வற்ற வாழ்வு ஆகிய நாவல்களை சி.வீ.வேலுப்பிள்ளையும் கங்காணி மகன் என்ற குறு நாவலை டி.எம். பீர்முகம்மதுவும் எழுதினர். குவாஜா அகமது அப்பாஸின் குங்குமப்பூ, அஜந்தா ஆகிய நாவல்களை கே.கணேஸ் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

சி.வீ. வேலுப்பிள்ளையின், 'தேயிலைத் தோட்டத்திலே' கவிதை பலரது கவனத்தை ஈர்த்தது.

மலையகத்து சிறுகதை எழுத்தாளர்

என்.எஸ்..எம். இராமையா, எஸ்.திருச்செந்தூரன், பொ.கிருஸ்ணசாமி, தெளிவத்தை ஜோசப், என்.ஏ.வடிவேலன், சாரல் நாடன், மரியதாஸ், பன்னீர்செல்வன், மலரன்பன், மாத்தளை வடிவேல், மல்லிகை.சி.குமார், ர.:.பேல், மலைச்செல்வன், தமிழோவியன், பரிபூரணன், தியாகராசா.

மலையக வாழ்வைப் பொருளாகக் கொண்ட நாவல்கள்

கோகிலா சுப்பையாவின் தூரத்துப் பச்சை, டாக்டர் நந்தியின் மலைக்கொழுந்து, யோ.பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன், தொ.சிக்கன ராசாவின் தாயகம், தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை, கே.ஆர்.டேவிட்டின் வரலாறு அவளை தோற்றுவிட்டது ஆகியனவாகும்.

5.2. செயல் நெறி

1. பின்வரும் அரும்பதங்களை வைத்து வசனம் அமைக்குக.

1. வம்சாவழி – ....
2. பொருளாதாரம் – ....
3. பரிமாணம் – ....
4. நூற்றாண்டு – ....
5. ஆத்மீகம் – ....
6. மணிக்கொடி – ....
7. மொழிபெயர்த்து – ....
8. வழிப்போக்கன் – ....
9. சுவாரஸியம் – ....
10. பரிதாபகடாட்சம் – ....

2. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இக்காலப் பகுதியில் மலையக வாழ்வின் இன்னல்களையும், பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு வீடற்றவன், வாழ்வற்ற வாழ்வு ஆகிய நாவல்களைச் சி.வீ. வேலுப்பிள்ளையும், கங்காணி மகன் என்ற குருநாவலை டி.எம்.பீர்முகம்மதுவும் எழுதினர். கோவிந்தசாமி தேவரும், கந்தசாமிக் கணக்கப்பிள்ளையும் தொழிலாளர் பிரச்சினைகள் குறித்தும் குடியுரிமைக் கெடுபிடிகள் குறித்தும் பாடல்கள் இயற்றினர். குவாஜா அகமது அப்பாஸின் குங்குமப் பூ, அஜந்தா ஆகிய நாவல்களைக் கே.கணேஷ் மொழிபெயர்த்து வெளியிட்டார். அவரது ஆங்கிலக் கவிதையொன்றுக்கு யப்பானிய அரச மாளிகையிலிருந்து பாராட்டுக் கிடைத்தது. சி.வீ.வேலுப்பிள்ளை வழிப்போக்கன் என்ற ஆங்கிலக் கவிதை நூலையும் வெளியிட்டார்.

1. சி.வி. வேலுப்பிள்ளையின் யதார்த்த நூல்கள் யாவை?

....

2. 'வீடற்றவன்' என்பது எதனைக் குறிக்கின்றது?

....

3. கே.கணேஷ் மொழிபெயர்த்து வெளியிட்ட நாவல்கள் யாவை?

....

4. இக்கவிதைகள், நூல்கள் யாவும் எதனை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன?

....

5. இதில் குறிப்பிட்டுள்ள எழுத்தாளர்களை வரிசைப்படுத்துக.

....

3. பின்வருவனவற்றைப் பிரித்தெழுதுக.

1. வழிப்போக்கன்	....	6. துன்பக்கேணி	....
2. சமயசம்பந்தம்	....	7. கிளர்ந்தெழுந்து	....
3. நாமக்கல்	....	8. அவலச்சுவை	....
4. இயக்கரீதி	....	9. தமிழோவியன்	....
5. கெடுபிடி	....	10. இரவோடிரவாகப்	....

4. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இப்பாடத்தில் சிறப்பித்துக் கூறப்படுவோர் யார்?

....

2. எதன்மூலம் மலையகத் தமிழரின் வாழ்வு மண்ணோடு இணைந்து கிடப்பதை அறிகிறீர்?

....

3. மலைநாட்டுத் தமிழர் எனப்படுவோர் யார்?

....

4. காத்திரமான இலக்கிய முயற்சிகளில் இறங்கியவர் யார்?

....

5. மலையத் தொழிலாளர் மத்தியில் விழிப்புணர்வும், போராட்ட வேகமும், உரிமை வேட்கையும் வளரக் காலாயிருந்தது யாது?

....

....

6. நீதிப் பாடல்கள்

பாடப் புத்தகத்தில் பாடல்களுக்கான பொருள் தரப்பட்டுள்ளமையினால் பாடப் பொழிப்பு சேர்க்கப்படவில்லை.

6.2. செயல் நெறி

1. பின்வரும் பாடலை உமது உரைநடையில் எழுதுக.

கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.

உரைநடை:

....

....

2. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துச் சொல் தருக.

1.	மானம்	....	6.	எள்ளளவு	....
2.	இரவாது	....	7.	பேணுவோர்	....
3.	ஈகை	....	8.	பேரின்பம்	....
4.	புறங்காட்டி	....	9.	காழுறுதல்	....
5.	மாட்சிமை	....	10.	மாண்பு	....

3. பின்வருவனவற்றுள் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பசி வந்தவுடன் பத்தும் பறந்து போய்விடும். அதில் ஒன்று,
   1. நேரம் 2. வழிபாடு 3. கர்வம் 4. சோம்பல்.
2. அன்பில்லாதவர்களிடம் தானடைந்த, துன்பங்களைக் கூறுதல்
   1. இன்பம் 2. பெருமை 3. துன்பம் 4. நன்மை.
3. கற்றவர்களுக்கு முன்னே தான் பெற்ற கல்வியைக் கூறுதல்,
   1. துன்பம் 2. நன்மை 3. அறம் 4. இனிமை
4. துன்பம் என்ற சொல்லைக் குறிக்கும் பிறிதொரு சொல்.
   1. இன்னல் 2. இன்பம் 3. இன்னார் 4. இல்லாள்.
5. அறிவில் மேம்பட்டவர் அடைதல் சிறந்த மாட்சிமையுடைய
   1. துன்பதுயரம் 2. பேரின்பம் 3. சிற்றின்பம் 4. உண்மை.

4. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நீதிப் பாடல்களை இயற்றியவர்கள் யாவர்?

....

....

2. "அன்றறிவார் யாரென றடைக் கலம் வெள வர்த
நன்றியின் நன்கினிய தில்". இதன் கருத்தை எழுதுக.

....

3. 'எள்ளளவென்றாலும் எவரிடமும் இரக்காது தன்னிடமிருப்பதைக் கொடுத்தல்'.
இதனை பாடல் மூலம் எழுதுக.

....

4. பசி வந்தவுடன் பறந்து போகும் பத்து விடயங்களையும் தருக.

....

....

5. பெருமை அடையக் கூடிய இனிய செயல்கள் சில கூறுக.

....

....

5. பின்வரும் பாடல்கள் யாரால், எதில், எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டுள்ளது என விளக்குக.

1. 'பத்தும் பசி வந்திடப் பறந்து போம்'

....

2. 'பெரியாரோ டியாத்த தொடர்விடுதல் இன்னா'

....

3. நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனி இனிதே.

....

7. திருமணி மாலை-நமுறூது அழிவுண்ட படலம்

7.1 பாடப் பொழிப்பு

காயல் பட்டணத்தில் சேகுனாப் புலவரான செய்கு அப்துல் காதிர் நாயினா லெப்பை ஆலிம் புலவர் பிறந்தார். இவர் திருமணிமாலையை இயற்றினார். திருமணிமாலை ஓர் இறைக் கொள்கையை வலியுறுத்துகின்றது.

அல்குர் ஆன் கூறுவது

ஓர் இறைக் கொள்கையை நிலைநிறுத்தி, மக்களை நல்வழிப்படுத்துவதற்கு இறைவன் காலத்திற்கு காலம் தூதர்களை (பிரதிநிதிகளை) வைப்பார். ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார் உலகில் தோன்றியதாக அல்குர் ஆன் கூறுகிறது.

இவர்களுள்

ஆதம் நபி(அலை) அவர்கள் முதல்வர் ஆவர். முகம்மது நபி(ஸல்) அவர்கள் இறுதி நபி ஆவார்.

அல்குர் ஆனில்

இருபத்தைந்து நபிமார்களின் வரலாறு கூறப்பட்டுள்ளது. நபிமார்களுள் ஒருவராகிய நபி இப்ராஹீம் அவர்களின் வரலாற்றைக் கூறுவதே திருமணி மாலையாகும்.

திருமணி மாலையில்

காண்டப் பிரிவுகள்

இயற்கை காண்டம் | செயற்கை காண்டம்

முப்பத்தொரு படலங்களையும், 1908 பாடல்களை கொண்ட காப்பியமாகும்.

திருமணி மாலை கதைச்சுருக்கம்.

நமுறூது என்னும் மன்னன்

தனது தந்தை கன் ஆனைக் கொன்று ஆட்சியை கைப்பற்றுகிறான். அவன் தனது வலிமையாலும் சூழ்ச்சியாலும் பல நாடுகளை வென்றான்.

இதனால்

தானே உலகின் அதிபதி எனவும், தன்னாலேயே உலகம் இயங்குகிறது எனவும் உலக மாந்தர் தன்னை வணங்க வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தான்.

அவன் வழி வந்த மக்களும்

அட்டூழியங்கள் செய்பவர்களாகவும் அஞ்ஞானத்தில் மூழ்கியவர்களாகவும் இருந்தனர்.

இவ்வேளையில்

நமுறூதை அழிக்கும் இறைவன் திட்டப்படி இப்றாஹீம் நபி (அலை) அவர்கள் பிறந்தார். ஆனால் இறுதியில் நமுறூது அழிந்து போனான்.

பாட்டுக்கான பொருள் நூலில் உள்ளது. மேலதிக பயிற்சிக்கள் சந்தர்ப்பம் கூறல், பாட்டுக்கு பொருள் ஆகியவற்றில் வெளிவரும்.

7.2 செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கி.பி.19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த காயல் பட்டணத்தைச் சேர்ந்த "சேகுனாப் புலவர்" எனப்படும் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் என்பவர் திருமணிமாலையை இயற்றினார். உலகில் ஓரிறைக் கொள்கையை நிலைநிறுத்தி மக்களை நல்வழிப்படுத்த இறைவன் காலத்துக்குக் காலம் தனது தூதர்களை (பிரதிநிதிகளை) அனுப்பி வைத்தான். இந்த வகையில் உலகில் தோன்றிய நபிமார்கள் ஓரிலட்சத்து இருபத்து நான்காயிரம் என்று அல்குர்ஆன் கூறுகிறது. எனினும் அவர்களுள் ஆதம் நபி (அலை) அவர்கள் முதல்வர் ஆவர். முகம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி ஆவார். அல்குர்ஆனிலே இருபத்து ஐந்து நபிமார்களின் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அல்குர்ஆனில் கூறப்படும் முக்கியமான நபிமார்களுள் ஒருவராகிய நபி இப்ராஹீம் அவர்களின் வரலாற்றைக் கூறுவதே திருமணி மாலை ஆகும்.

1. உலகில் தோன்றிய நபிமார்கள் எத்தனை பேர்?

....

2. 'திருமணி மாலை' எதனைக் கூறுகிறது?

....

3. திருமணிமாலையை இயற்றியவரின் நோக்கம் என்ன?

....

4. 'ஓரிறைக் கொள்கை' என்றால் என்ன?

....

5. இறுதி நபி எனக் கூறப்படுபவரின் பெயர் யாது?

....

2. பின்வருவனவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இப்றாகீம் நபியை அழிக்க நமுறூது பல வழிகளில் சூழ்ச்சி செய்தான். இங்கு சூழ்ச்சி என்பதன் ஒத்த வடிவம்.
   1. சூனியம் 2. வஞ்சனை 3. பாவம் 4. துயரம்

2. 'நீடுபட் டிருந்த சங்க நிரைபடப் புக்கி னாரால' இதில் சங்கநிரை பட என்பது,
   1. சங்கநிரை 2. சங்கம் நிரை 3. சங்குக் கூட்டம் 4. சங்க நாதம்.

3. 'நெடுங்களத் தமரின் வெம் போா' இதில் நெடுங்களம் என்பது,
   1. நெடிய சமர் 2. போர்க்களம் 3. நெடியகளம் 4. நெடிய நாடு.

4. எல்லோரும் வியப்படையும் வண்ணம் வெற்றி கொண்டவன் யான். இதில் வண்ணம் என்பது,
   1. நிறம் 2. விதம் 3. செயல் 4. நெறி.

5. 'வாரியின் முழக்க மென்னோ வாய்விடு' இதில் வாரி என்பது,
   1. யானை 2. சமுத்திரம் 3. காற்று 4. இடி.

3. பின்வரும் அரும்பதங்களை வைத்து வசனம் அமைக்குக.

1. முத்துப்பல்லக்கு ....
2. கரிய மலை ....
3. மள்ளர்கள் ....
4. சோதிடர் ....
5. கடுஞ்சினம் ....
6. அகங்காரம் ....
7. தாமரை ....
8. புறத்திறம் ....
9. சரதம் ....
10. தண்ணம் ....

4. பின்வரும் சொற்களுக்குப் பொருள் (ஒத்த சொல்) தருக.

1. உன்னும் : ....
2. இரைப்பு : ....
3. பம்பிய : ....
4. வாரி : ....
5. துண்டம் : ....
6. எழிலி : ....
7. சபமணி : ....
8. வானவர் : ....
9. மருவலர் : ....
10. தவக்கம் : ....

5. பின்வரும் பாடலை வாசித்து அதன் கருத்தை உமது உரைநடையில் எழுதுக.

1. "உள்ளறை புகுந்துஞ் செந்தீப் பொலிவுற வொருங்கு பெய்துந்
தள்ளுறாப் புகையீற் றத்த மறைதலே தாக்கு வேந்தன்"
....
....

2. "கொள்ளுமே னகாய கத்தின் கூரொடு மசகக் கூட்ட
மள்ளிய வுயிர்கள் வாய்கை யலைக்குலை கொள்வ ரொன்னார்".
....
....

6. பின்வருவன யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது என எழுதுக.

1. "திறத்துறை நின்றன் சிந்தை தோற்றுவா னெவ்வா றாகப்
புறத் திறங் கண்டா யென்னப் பொறித்திட வினவி னாரால்"
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

2. "றெள்ளகத் தேவல் கொண்ட தேவருங் கரிய வண்ணங்
கொள்ளகத் தெழுந்த மேகக் குழுவினைப் பணித்தார்"
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

3. "வானுறு மமரர் வாழ்த்த மருங்குறுந் தவத்தோர் வாழ்த்தக் ...."
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

8. ☞ தேவகிருபையை முன்னிட்டு வாழும்...

8.1 பாடப்பொழிப்பு

கிழவி செய்தது விசேஷமில்லை.

சாகும் முன்னர் நடந்த சம்பவம் தான் விசேஷமானது என செத்த வீட்டுக்கு வந்த அனைவரும் பேசினார்கள். "எப்பவும் இப்படித்தான்; ஆர் செத்தாலும் சாகும் முந்தி விசேஷமான காரியம் நடக்கும்" எனச் சட்டம்பியார் தத்துவம் பேசினார்.

அந்தோக் கிழவிக்கு தான் ஊரில் நடந்த விடயங்கள் தெரியும். அந்தோக் கிழவி ஒரு ஸ்தாபனம் தான். அந்தோக் கிழவி பழுத்தபழமாக கரம்பனில் வாழ்ந்தாள். கிழவிக்கு ஆறு குழந்தைகள் பிறந்த போதும் ஆறாவது பையனே எமனிடம் இருந்து தப்பினான்.

ஆறாவது மகன் சின்ன வயதிலேயே வீட்டை விட்டு ஓடி விட்டான். மூன்று நாலு வருசங்களுக்கு முந்தி திடீரென்று வீடு தேடி வந்தான். அவர்களிடையே நடந்த கடைசிச் சம்பாஷணை இது தான்.

"புட்டு அவிச்சாச்சடா மோனே! போய் மூஞ்சியைக் கழுவீற்று வா!!"
"எனக்கு பழங்கறிச் சட்டிக்குள்ள போட்டு வைச்சிற்று நீ சாப்பிடு." நான் ஒரு ஆளைப் பாத்திற்று வாறான்.
கிழவிக்கும் மகனுக்கும் நடந்த கடைசி சம்பாஷணை இதுதான்.

மூன்றாம் நாள் தபாற்காரச் சங்கரப்பிள்ளை சொல்லித்தான் கிழவிக்கு விஷயம் தெரியும். அவசரமாகத் தந்தி வந்து போறதாக உன்ர மகன் உன்னட்டச் சொல்லச் சொன்னார் ஆச்சி. போய்க் காயிதம் போடுவராம்.

கிழவிக்கு ஏமாற்றம், ஆத்திரம், விரக்தி, தனிமை உணர்வு, அத்தனையும் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதிக் கண்டத்தைப் பிணிக்க கிழவி வேப்பமரத்து நிழலில் இருந்து தன்னுள் முனகும்.

ஒவ்வொரு நாளும் தபால்காரனை ஆவலுடன் எதிர்பார்த்து காயிதம் வந்ததோ என வினாவுவாள். கிழவிக்குப் பார்வை மங்கி விட்டது. வேப்பமர நிழல்தான் கிழவிக்கு தஞ்சமாக இருந்தது.

ஒரு நாள் மரநிழலில் கிழவியைக் காணோம். தபால்கார சங்கரப்பிள்ளைக்கு என்னவோ போலிருந்தது. சந்திக்கடை சூசைப்பிள்ளையிடம் விசாரித்தான். சுகமில்லை கொட்டிலில் படுத்து கிடக்குது.

சங்கரப்பிள்ளை கொட்டிலுக்கு சென்று "ஆச்சி" என்று பலமாக கூப்பிட்டான். தொட்டு அசைத்தான். ஆரது என்று முனகிக் கேட்டது. "நான்தான் சங்கரப்பிள்ளை" எனக் கூற கிழவியின் கண் விளக்கு பிரகாசித்தது. 'காயிதமா?' எனக் கேட்டது.

சங்கரப்பிள்ளை குரல் வளைக்குள் ஏதோ ஒன்று அடைத்துக் கொண்டது. அவ்வீடத்தை விட்டு அகன்றான். இரண்டு மூன்று நாட்களாகக் கிழவியின் பிதற்றல் அதிகரித்தது. தலைப்பலும் உதறலும், சன்னியாம்.

மகன்ர காயிதம் கண்டுதான் கிழவிக்கச் சீவன் போகும் போல் எனக் கதைத்தனர். அடுத்த நாள் சங்கரப்பிள்ளை காயிதம் விநியோகிக்கும் நேரம். தன் காயிதக் கட்டிலிருந்து கடிதம் ஒன்றை எடுத்துக் கிழவியின் கைக்குள் வைக்கிறான். "மகன்ர காயிதம் ஆச்சி"

கைகால்கள் பதற, கண்கள் நீரைச் சொரிய, முகம் ஆனந்தத்தால் பிரகாசிக்க, கிழவி நீரில் மூழ்கித் தத்தளிப்பவன் துடுப்பை பிடிப்பது போலக் கடிதத்தை பற்றினாள். கண்ணில் ஒற்றிக் கொண்டாள். கடிதம் கிழவியின் கையில் இருந்து நழுவிக் கீழே விழுகிறது. கிழவியின் கண்களையும் வாயையும் பொத்தினார்கள

கிழவியின் மகன்ர விலாசமென்ன என வினாவ சங்கரப்பிள்ளை மகன் காயிதம் அனுப்பவில்லை. அது என்ர வேலையென கூறினான்.

சூசைப்பிள்ளை உள்ளே போகிறார்.
அவன் எங்கே இனி வரப் போகிறான். சவத்தை எடுப்போம் என உரத்துச் சொல்லுகிறார்.

8.2 செயல்நெறி

I. பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. சாகுமுன் நடந்த சம்பவம்தான் விசேஷம். இதில் விசேஷம் என்பது,
   1. சிறப்பு 2. ஆச்சரியம் 3. ஆனந்தம் 4. திறமை.

2. கிழவியின் தூரத்து உறவு பேத்தி புஷ்பம். இதில் உறவு முறையானது,
   1. புஷ்பம் 2. தூரம் 3. பேத்தி 4. கிழவி.

3. கரம்பன் செவத்தியார் கோயிலடி வாசிகளுக்கு அந்தோக் கிழவி ஓர் ஸ்தாபனம். இதில் ஊரைக் குறிக்கும் சொல்.
   1. ஸ்தாபனம் 2. ஓர் 3. கரம்பன் 4. கோயிலடி.

4. மகனை அழைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல் பாடத்தில் வந்தது அது எது?
   1. மவன் 2. மவனே 3. மோனே 4. மேவனே

5. அந்தோக் கிழவியை வாட்டிய துயரங்களாக இருந்தவை,
   1. ஏமாற்றம், ஆத்திரம், விரக்தி, தனிமை உணர்வு.
   2. துன்பம், மகிழ்ச்சி, ஆத்திரம், அவமானம்.
   3. ஏமாற்றம், சோகம், துன்பம், அவமானம்.
   4. அவமானம், ஆத்திரம், இகழ்ச்சி, கவலை.

2. பின்வருவனவற்றுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	மரநிழல்	....	....
2.	முட்டி மோதி	....	....
3.	ஆளைப் பார்த்திட்டு	....	....
4.	புழுக்கைப் பயல்	....	....
5.	பழங்கறிச் சட்டி	....	....

3. பின்வரும் சொற்களின் சரியான தமிழ்ச் சொல்லை எழுதுக.

1.	காயிதம்	....	6.	சுறுக்கு	....
2.	ஆளைப்பாத்திற்று	....	7.	பெண்டுக	....
3.	மூஞ்சி	....	8.	நூந்ததனை	....
4.	அவரை	....	9.	ஆரது	....
5.	மகன்ர	....	10.	எடிபுள்ள	....

4. பின்வருவனவற்றுக்கு எதிர்க்கருத்துத் தருக.

1.	பிரகாசம்	....	4.	தனிமை	....
2.	முனகல்	....	5.	பரம்பரை	....
3.	விரக்தி	....	6.	கூட்டம்.	....

5. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதுக.

1. கிழவியின் மகன் இவ்வாறு நடக்கக் காரணம் யாதாக வீருக்கும்?

   ....

2. கிழவி தபாற்காரனைத் தினமும் எதிர்பார்த்திருந்தது ஏன்?

   ....

3. 'நப்பாசை' என்ற சொல் எதனைக் குறிக்கிறது?

   ....

4. "சன்னியாய்க் கிடந்த கிழவி! சுருக்கு எடுக்க வேணும்". இதன் கருத்து எது?

   ....

5. கிழவி கண் மூடியதும் நடந்த நிகழ்ச்சிகள் யாவை?

   ....

6. இக் கதையிலிருந்து நீர் அறிந்து கொண்ட பாடம் யாது?

   ....

9. இரட்சணிய யாத்திரீகம்

9.1 பாடப் பொழிப்பு

மோட்சப் பயணம்

ஜோன் பனியன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய "மோட்சப் பயணம்" (Pilgrim's Progress) எனும் நூலை முதல் நூலாகக் கொண்டு தமிழில் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை என்பவர் எழுதிய காப்பியமே இரட்சணிய யாத்திரீகம் ஆகும்.

உலக ஆசாபாசங்களில் மூழ்கிக் கிடந்த ஆத்தும விசாரி என்னும் உண்மைக் கிறிஸ்துவன் இறைவனின் நற்செய்தி கிடைக்கப் பெற்று மோட்ச பயணத்தை தொடங்குகிறான். பயணமானது இடருக்கு மேல் இடரை தரும் பயணமாக அமைகிறது.

இவ்வேளையில்

மோட்ச பயணம் மேற்கொள்ளுபவருக்கு அவ்வழியில் வந்த குருவானவரான நற்செய்தியாளர் அவரை நல்நெறி வழிப்படுத்துகிறார்.

குருதரிசனப் படலம்

குருவை சந்தித்த போது ஆத்தும விசாரிக்கு (ஆன்மிகனுக்கு) அவர் செய்கின்ற உபதேசம் பற்றியது குருதரிசனபாடலாகும்.

சஞ்சலம் அடைந்த பைத்தியக்காரன் போல ஆத்தும விசாரி வரும் போது குளிர்ச்சி பொருந்திய எண்ணுதற்கரிய துயரங்களுக்கெல்லாம் அழிவு செய்யக்கூடிய உருவம் கொண்ட சுவிசேஷகன் வந்து சேர்ந்தான். ஆத்மவிசாரியை நோக்கி நீ யார், ஏன் வருந்துகிறாய்? உன்னிடம் துயரம் வரக் காரணம் என்ன? எனச் சொல்வாயாக என்று கேட்டார்.

நாசதேசத்தில் இருக்கிறவன் அங்கு வாழும் கொடியவர்களுள் கொடியவன் நான். கருணை வேந்தனாரின் ஆணையை மீறிய தீயவர்களை அக்கினி நரகத்துக்குள் தள்ளுதல் திண்ணம் என்று சுருதி நூல் இயம்புகின்றதை ஆராய்வதனால் இந்த துயரக் கடலுள் அமிழ்ந்தினேன்.

இறைவனை மறந்து துரோகம் செய்த புலையனுக்கு மனஸ்தாபப் படுகின்றதற்கு காரணம் யாது?. சாகவும் மனமில்லை, தண்டனைக்கு துணிவில்லை, புறத்தாரை விட்டுப் போக புகலுமில்லை, ஈடுசெய்வோம் என்றாலும் பலமில்லை. அதனாலேயே பதைக்கின்றேன்.

நீ சொல்வது உண்மையே. வேதனை அடையும் நீ ஏன் சாவதற்கு பயப்படுகிறாய் என்பதைச் சொல். பாவகர்மியான எனக்கு அக்கினிக் கடற் கிடங்கில் என்னை ஆழ்த்தும் என்று அஞ்சுகிறேன். இவ்வுலகில் மன்னவர் எம்மைத் தண்டிக்கின்றதற்கு அஞ்சுகிறோம். பூவுலகில் நீதி மன்னனுடைய அளவற்ற தண்டனைக்கு பயப்பட மாட்டோமா? இத்தகைய சிந்தனைகள் இருதயத்தை வருத்துவதால் வருத்துகிறேன் என்றார் ஆத்மவிசாரி.

நீ தாமதித்து நிற்பது நீதியோ, துன்பம் வரும் முன்பே அடைக்கல நாதன் தேடி சென்றிடாமல் சுற்றி திரிகிற சிந்தனை என்ன? இரட்சிப்பின் மார்க்கம் இது. தெய்வநாயகன் திருநகர்க்கு செல்லுகின்ற வழி எவ்வழி என நான் அறியேன்.
ஆதியான் திருநகர்க்கு செல்லும் ஜீவபாதையை நீ அறிந்தாயானால் அதை எனக்குச் சொல் எனக் கேட்க, வேதியர் குருவாகிய சுவிசேஷகன் நான் சொல்லுகிறேன் கேள் எனச் சொல்ல ஆரம்பித்தார்.

1. பின்வரும் பாடலை வாசித்து அதன் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

தண்ணளி தயங்கிய முகத்துத் தாமரைக்
கண்ணிணை மல்கிய கருணை காட்டிட
உண்ணிறை யன்புமிக் கொழுகிற் றென்னவே
வண்ணவான் மோழிச்சுவை யமிர்து வார்ந்துக.

உரைநடை : ....
....

2. இப்பாடலிலுள்ள சில சொற்களுக்கு ஒத்த வடிவம் தருக.

1. தண்ணளி ....
2. தாமரை ....
3. கருணை ....
4. இருதயம் ....
5. ஒழுகிற்று ....
6. அமிர்தம் ....
7. விளக்கு ....
8. கண்கள் ....
9. அன்பு ....
10. சொரிந்தது ....

3. பின்வரும் சொற்களுக்கு எதிர்வடிவம் எழுதுக.

1. ஜீவ வாழ்க்கை ....
2. பூலோகம் ....
3. அஞ்சுதல் ....
4. நியாயத் தீர்ப்பு ....
5. துயரக் கடல் ....
6. இழிவு ....
7. துரோகம் ....
8. தீவினைகள் ....
9. புலைத்தன்மை ....
10. புறத்தியார் ....

4. பின்வரும் அருஞ்சொற்களை வைத்து பொருள் விளங்க வசனம் அமைக்குக.

1. ஆதியான் ....
2. தெய்வநாயகன் ....
3. சுவிஷேகன் ....
4. பூலோகம் ....
5. அக்கினி நரகம் ....
6. திண்ணம் ....
7. புலையன் ....
8. இரட்சிப்பு ....
9. அடைக்கலம் ....
10. மெய்ப்புண்ணியம் ....

5. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இரட்சணிய யாத்திரீகம் யாரால் முதலில் எழுதப்பட்டது?
....
2. இதனை தமிழில் மொழிபெயர்த்தது யார்?
....
3. இது எதனை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது?
....

4. குருதரிசனப் படலத்திலிருந்து நீர் புரிந்து கொண்டவை யாவை?

....

5. துன்பங்களுக்கெல்லாம் இறுதி செய்பவனாய் உள்ளவர் யார்?

....

6. பின்வருவன யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது எனக் கூறுக.

1. "இனைய சிந் தனையென திதய்த் தூன்றலால்
வனை பொலன் கழலினாய் வருந்து வேனென்"

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

2. "எஞ்சுறா வேதனை யீயைதல் கண்டுமேன்
அஞ்சுதி சாவதற் கமைதி கூறெனா"

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

3. ஜயகேள் நாசதே சத்த னாங்கமர்
வெய்யரில் வெய்யன்யான் வெகுளித் தீவிழந்

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

10. ☞☜ 'மழைப்பாட்டு' மகிமை

10.1 பாடப் பொழிப்பு

இஸ்லாம் எனும் எழிற் பயிர்

ஏகத்துவத்தை எடுத்துக் கூறும் முஸ்லிம்கள் பாலைவனங்களில், பனிபடர்ந்த நாடுகளில் சோலைகளின் தீவுகளில் எல்லாம் பல்கிப் பொருகி வளர்ந்துள்ளது. ஓர் இறை கொள்கையை பரப்பும் உயர் நோக்கம் கொண்ட அவர்கள், அதற்காகத் தமது பல ஆற்றல்களையும் பயிற்றுவித்து திறன் உணர்ந்து பயன் விளைவித்தனர். அதனை அறிந்து கொள்வதற்கு தலையாய ஒன்றாகும்.

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள்

இந்தியாவில் ஏகத்துவத்தை பரப்பியதோடு அந்நாட்டு மொழிக்கும் சூழலுக்கும் பண்பாட்டுக்கும் ஏற்ப பழகி நல்லறத் தூதுவர்கள் தமிழ் மொழியிலும், தமிழ் பண்பாட்டிலும் தம்மை பழக்கி கொண்டார்கள். இவர்களின் பாரம்பரியத்தில் வந்தவர்களே இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள்.

புலவர்கள் அற்புதங்களும், அறவுரைகளும், சித்துகளும் செய்து மக்களை மெய்சிலிர்க்க் வைத்தனர். காவியங்களால் படிப்போர் உள்ளங்களை களிப்படையச் செய்தனர். சமரகவி பாடி சாதனை புரிந்தனர்.

இத்தகையோரில்

சொர்ணகவி நெய்னா முஹம்மது பாவாப் புலவர் ஒருவராவர். அன்னார் பாடியளித்த சிறந்த இலக்கிய கருவூலம் மழைப்பாட்டு ஆகும்.

பருவ மழைகள் பொய்த்த போது மக்கள் நேர்த்திகள் செய்வது குலதெய்வங்களுக்கு காணிக்கை சமர்ப்பிப்பது பண்டைய வழக்கம். உண்மையான முஸ்லிம் மாந்தர்கள் இப்படியான இக்கட்டான காலத்தில் சில வரையறைகளுக்குட்பட்டு செயல்படுவர்.

அதிராம்பட்டினத்தில் கி.பி. 1862ஆம் ஆண்டு ஏறத்தாள மூன்று ஆண்டுகள் மாரி மழை பெய்யவில்லை. மக்கள் இன்னல்களுக்கும் சோதனைக்கும் உள்ளானார். இவ்வேளையில் ஷெய்கு சுலைமான் லெப்பை சாஹிம் எனும் மார்க்கறிஞர் இந்நகருக்கு வருகை தந்தார். அவர்கள் சொர்ன கவியவர்களின் உன்னத புலமையினை உணர்ந்தமையால் அவரை மழைகோரி இறைவிடம் குறையிறைஞ்சிக் கவிதைகள் பாடியருள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்க வெள்ளிக்கிழமை ஜீமுஆப் பள்ளியில் குத்பா ஓதித் தொழுகை முடித்தபின் செந்தமிழ்ச் சீறாவிலுள்ள "மழையழைத்த படலம்" படித்த பின் தாமியற்றிய "மழைப்பாட்டு" பாடல்களை சரமாரியாக பாடிப் பொழிந்தருளினார். அது கண்டு எல்லாம்வல்ல ஏக நாயகனா அல்லாஹ், மறுநாளே மழைசாரி பொழிந்தருளினான். இவ்வுண்மையினை இம்மழைப்பாட்டின் இறுதிப் பாடல் உணர்த்துகிறது.

தூயவனின் அருள் மேவிய செய்கு சுலைமான் லெப்பை சாகிபு முன்பு வையகம் புகழ்கின்ற சிறாவில் நபி மழை அழைத்த படலம் படித்த பின் செய்யா மாமழை நூலினை அரங்கேற்றவே யாவரும் கூடி மிகழ்ந்தனர்.

இறைவனிடம் குறை இறைஞ்சும் போது, தம்முடைய இயலாமை, குறை, பாவம் முதலியவற்றை முன் வைத்து மன்னித்து அருள்புரிய வேண்டுதல் புரிவது சிறப்பான பண்புகள் ஆகும்.

சொர்ன கவியாரின் சொன்மாரி இறைஞ்சல்

பங்கம் ஆகின்ற பழி (பிழைகள்) செய்கின்ற பாதகர் ஆகிய எங்களுக்கு உதவி செய்ய உலக ஏக நாயகனே திரு நபி முஹம்மது (ஸல்) அவர்களே திங்களோடு எதிர் பேசி சீரான உலகப் புகழினை காக்கவே எம்மை சோதனைக்கு உள்ளாக்காமல் மழையை இறக்கித் தருமாறு வேண்டுகிறார்.

வேதம் ஓதுகின்ற வேதிய ராலேயோ, மிக்க கற்புள்ள கண்ணியராலேயோ நீதி வழுவா மன்னர்களினாலோ நேர்மை தப்பிய பிழை நடந்து விட்டது எங்களுக்கு. தீது செய்தமையால் எம்மை வருத்தாது மனம் வைத்து திரு நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பொருட்டு மழையை இறக்குவாய் நாயகனே.

பசித்திருப்போர் முன்னிலே உண்ணும் உணவுகளை இன்பமாக காட்டி பறிப்பது போலவே கறுத்த மேகம் பின் வெளுத்துக் கலங்குகிறது. மழை மூட்டமாக வந்து மாரி மழை சொரிய நாட்டம்

இனிய சொற்களால் இன்னரைத் தீர்க்க கோரி இடர்களை கூறிச் செல்வந்தர் வறியவர்களுக்கு பொருள் வழங்க விடாமல் தடுப்பது போல எவரும் தடுப்பரானால் அது அநீதியே? இதனைப் போலவே மழை பொழிந்திட மனமிரங்கி வந்துள்ள மேகக் கூட்டத்தை மதி கெட்ட வாடைக்காற்று தடுத்து விடுகிறது. இந்நிலையை மாற்றி இறைவா! மண்ணகம் தழைக்க மழையை இறக்குவாய் செம்மையான மாமறையின் பொருளாக உள்ள ஆதியே நாயகனே!.

பூவினுடைய வாழ்க்கையானது அற்பமானது. அதே போன்று மனித வாழ்க்கையும் அற்பமானது. அதனால் தான் தருமங்கள் செய்து இவ்வாழ்க்கையை சிறப்பான தாக்குவார்கள். நல்லுள்ளம் கொண்ட வள்ளல் பெருமக்கள். அவர்களையும் சஞ்சலத்திற்கு உள்ளாக்குகிறது மழை. மானுக்கு பிணையாக நின்ற முஹம்மது வள்ளலே உனக்காக இரங்கியே கானலோக மழையை இறக்குவாயாக காட்சிக்கு புலனாகாக, காருண்யானே என இறைஞ்சுகிறார்.

10.2. செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

'மழைப்பாட்டு' சிறிய படைப்பாயினும், சீரிய இலக்கியமாகத் திகழ்கிறது. உண்மையில் இம்மழைப்பாட்டு முழுவதும் தூய இறைவனிடம் துஆ இறைஞ்சலாகவே அமைந்திருக்கக் காணலாம்.

இறைவனிடம் வேண்டுதல் புரிவதற்கு மார்க்கம் (ஷரீஅத்) எத்தகைய விதி முறைகளை வகுத்துள்ளதோ, அத்தனையும் வழுவற இப்பாடல்களில் அமைந்திருப்பது கண்கூடு. இறைத் துதியும் இறைதூதர் புகழ்ச்சியும் அமைந்திருப்பதோடு, படைப்புகளில் சிறந்த அண்ணல் நபி முஹம்மது முஸ்தபா ரசூல்(ஸல்) அவர்களை 'வஸீலா' வாக (பொருட்டாக) அமைத்து, இறையிடம் குறையிரந்து நிறையினைக் கேட்பதும் வழி வழி வந்த வகையான ஒழுக்கமாகும். இத்தகு நல்லமைப்புக்கள் இதன் எல்லாப் பாடல்களிலும் மிளிரக் காணலாம.

1. 'கண்கூடு' என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறுக.

   ....

2. இறைத்துதி, நல்லமைப்பு, சீரிய இலக்கியம் இவைகளுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

   ....

3. வழுவற என்ற சொல்லுக்கு ஒத்த சொல் தருக.

   ....

4. 'மழைப்பாட்டு' பாடப் பட்டதற்கான காரணத்தை ஆராய்க.

   ....

5. இப்பந்தியினை வாசித்து நீர் அறிந்த உணர்வினைக் கூறுக.

   ....

2. பின்வரும் பாடலுக்கு உமது உரைநடையில் கருத்து எழுதுக.

“தேட்ட மாம்பசியுள்ளவர் முன்பிலே
தின்னும் சோறு கறிகளை இன்பமாய்க்
காட்டிக் காட்டிப் பறிப்பவர் போலவே
கறுத்த மேகம் வெளுத்துக் கலங்குதே
மூட்ட மாயொரு மூசாப் பதாகவே
மூடி மாரி வீடாது சொரிந்திட
நாட்டம் வைத்தனை வோரையுங் காத்தருள்
நந்திலா மணியே எங்கள் நாயனே!”

அ) உரைநடை :..
....

ஆ) இப்பாடலிலுள்ள உவமை நயங்களை வரிசைப்படுத்துக.

1. .... 2. ....
3. .... 4. ....

3. பின்வரும் அருஞ்சொற்களை வைத்து பொருள் விளங்க வசனம் அமைக்குக.

1. ஏகத்துவம் ....
2. பண்பாடு ....
3. நல்லறத்தூதுவர் ....
4. பாரம்பரியம் ....
5. காவியங்கள் ....
6. பாவாப் புலவர் ....
7. கருவூலம் ....
8. உன்னதம் ....
9. குறையிரந்து ....
10. தொல்காப்பியர் ....

4. பின்வரும் சொற்களின் உவமேயங்களை எடுத்துக் கூறுக.

1. உத்தம சீலர் .... 5. ஏகநாயக ....
2. மூடிமாரி .... 6. மாசிலா மணியே ....
3. மானுக் குப்பினை .... 7. சீதமா மழை ....
4. தரணி போற்றும் .... 8. பொன் மாரி ....

5. பின்வருவனவற்றுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. 'தொழுகை' முடிந்த பின் ஊர் மக்களனைவரும் கூடியமர்ந்தனர். இதில் தொழுகை,
   1. உபவாசம் 2. வணக்கம் 3. பெயரெச்சம் 4. ஆராதனை.

2. 'எங்களுக்குதவி செய்வ தாரினி ஏக நாயக னே' இதில் ஏக என்பது,
   1. உவமானம் 2. உவமேயம் 3. பெயரெச்சம் 4. உரிச்சொல்.

3. 'உவமைச் சுவை ஊடுருவி நிற்கக் காண்பர்' ஊடுருவி என்பதன் எதிர்ச்சொல்,
   1. உட்புகுந்து 2. உள்ளிருந்து 3. வெளியேறி 4. வெளிப்புகுந்து

4. 'என்ன இந்த மேகம் இப்படி ஏமாத்துது?' இதில் கவி வடிவம்,
   1. கறுத்த மேகம் வெறுத்துக் கலங்குதே.
   2. முட்ட மா பொரு மூசாப் பதாகவே.
   3. காட்டிக்காட்டி பறிப்பவர் போல.
   4. மூடிமாரி விடாது சொரிந்திட.

5. 'சொன்னம்' என்ற சொல்லுக்கு இதில் கூறப்பட்டுள்ள ஒத்த வடிவம்
   1. நாணயம் 2. வெள்ளி 3. பொன் 4. மாணிக்கம்.

6. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. 'மழை பொழியாமல்' விட்டதற்கு எவை காரணமாயிருக்கும் என புலவர் கூறுகிறார்?

   ....

2. தொல்காப்பியர் உவமையியலுக்குக் கூறும் இலக்கணம் யாது?

   ....

3. மழைப்பாட்டைப் பாடியவரின் முழுப் பெயரைத் தருக.

   ....

4. உவமையில்லாத பாட்டுக்கள் சுவைபட இருக்குமா?

   ....

5. மானுக்குப் பிணையாக நின்ற வள்ளலாரின் பெயர் யாது?

   ....

6. இறைவனைப் புலவர் எவ்வாறெல்லாம் விளித்து இறைஞ்சுகின்றார்?

   ....

11. அறிவுடை நம்பி

11.1 பாடப் பொழிப்பு

நாடகத்தின் சாரம் வழங்கப்படுகிறது.

பூங்குன்றனும் இளநாகனும் ஊர்ப் பெரியவர் நன்னனின் இல்லத்தில நுழைகின்றனர். இளநாகன் கையில் நன்கு மூடப்பட்ட செப்பு குடம் ஒன்று இருந்தது. புதையல் தான் எமது பிரச்சினை. நல்ல தீர்ப்பு கிடைக்கும் எனும் நம்பிக்கையுடன் தீர்வு கேட்கின்றனர்.

இளநாகன்

என் மகன் உழைத்துப் பொருளீட்ட வேண்டும் என்பதற்காக நிலத்தை வாங்கினேன். நிலத்தில் புதையல் கிடைத்தது. விலை உயர்ந்த மணிகளும் பொற்காசுகளும் இருந்தன. புதையல் காணி விற்றவருக்கு சேர வேண்டும். ஆனால் அவரோ வேண்டாம் என்கிறார். இப்புதையலை எடுத்துக் கொள்வது நேர்மையாகாது என்றான்.

பூங்குன்றன்

நான் நிலத்தை விற்கும் போது நிலமும் அதன் பயனும் அவருக்கு உரியது என்றே விற்றேன். எனவே அந்நிலத்தில் கிடைத்த புதையல் எனக்கு எப்படி உரிமையாக முடியும். ஆனால் இளநாகன் புதையல் உரியவரைத் தான் சேர வேண்டும் என்கிறார்.

நன்னன்

பூங்குன்றனரே! புதையல் உமக்கு உரியது என இளநாகனார் சொல்லி விட்டார். எனக்கும் அது உடன்பாடாக தெரிகிறது என்றார்.
உங்களுடைய வழக்குக்கு நீதி வழுவாத சோழ அரசரிடம் சொல்லுங்கள் அங்கே நல்ல தீர்ப்பு கிடைக்கும்.

காட்சி – 2

அரியணையில் மணி முடி அணிந்த அரச உடையுடன் பத்து வயதுச் சிறுவன் திருமாவளவன் அமர்ந்து இருக்கிறான். காவலன் ஒருவன் உள்ளே நுழைந்து பணிவாக வணங்குகிறான்.

புதையலுடன் சென்ற இருவரும் சிறுவன் அமர்ந்து இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தமையோடு இந்தச் சிறுவனா தீர்ப்பு சொல்லப் போகிறான். இவனால் எம்வழக்கை புரிந்து கொள்ளவே முடியாது.

திருமாவளவன்

அவர்களின் முகக் குறிப்பை வைத்தே அவர்களை உணர்ந்து கொண்ட அரசன், அவர்களை மாலையில் வருமாறும், பழுத்த அனுபவம் நிறைந்த அறிவுடை நம்பி என்பவர் அரண்மனையில் அமர்ந்திருப்பார் அவர் உங்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்றனர்.

அமைச்சர் வழக்கை விசாரிக்காது திருப்ப அனுப்பக் காரணம் யாது என்று கேட்டார்.

அப்போது அரசன் அவர்கள் உன்னைச் சிறுவன் என உணர்ந்தமை அவர்களின் முகக்குறிப்பு எனக்குக் காட்டியது. நான் எந்த தீர்ப்பை வழங்கினாலும் அவர்களுக்கு நிறைவு ஏற்படாது என்றார்.

வழக்கை பூங்குன்றன் சொல்வது

எனது மகளின் திருமணத்திற்காக நிலத்தை விற்றேன். நிலத்தை உழுத போது இந்த புதையல் குடம் கிடைத்தது. நான் நிலம் விற்கும் போதே அதன் உரிமையை விற்று விட்டேன். எனவே இந்தப் புதையல் எனக்குரியதன்று.

வழக்கை இளநாகன் எடுத்துரைத்தல்

எனது மகன் தொழில் செய்து பொருளீட்ட வேண்டும் என்றே நிலத்தை வாங்கினேன். நிலத்தில் விளைந்த விளைச்சலில் தான் எனக்கு உரிமை உள்ளது. பிற பொருள் எனக்கு தேவையில்லை.

உயர்ந்த பண்புடைய நீங்கள் இருவரும் உறவினர்கள். உங்கள் மகனுக்கும் இவர் மகளுக்கும் திருமணம் செய்து வையுங்கள். திருமணப் பரிசாக இந்த புதையலை அவர்களுக்கு வழங்குங்கள் என்றார்.

தீர்ப்பை இருவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றபோது திருமண வளவன் தனது மாறுவேடத்தை கலைத்த பின், அவர்களில் பூங்குன்றன் அறிவுக்கூர்மைக்கும் வயதுக்கும் தொடர்பில்லை என்றான்.

அரசன் உங்கள் நற்பண்புகளால் நம்நாடே பெருமை பெறுகிறது எனக் கூறி மணமக்களை வாழ்த்தினார்.

11.2 செயல் நெறி

1. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. 'புதையல்' என்ற சொல்லின் ஒத்த வடிவச் சொல் குறிப்பது,
   1. நிலத்தினடியில் புதைத்து வைத்துள்ளவை.
   2. நிலத்தினடியில் உருவாக்கப்படுபவை.
   3. நிலத்தினடியில் புதையுண்டு போனவை.
   4. நிலத்தினடியில் உருமாற்றப்படுபவை.

2. 'முன்னோர்'கள் என்பவர்கள் வாழ்ந்த காலம் என்பது,
   1. தொன்மை 2. புதுவாழ்வு 3. புதுயுகம் 4. புதுமை.

3. 'அரியணை' என்பது
   1. அந்தப்புரக் கதிரை 2. அரசர் அமரும் கதிரை
   3. அமைச்சர் அமரும் கதிரை 4. அரசிகள் அமரும் கதிரை.

4. 'மாறுவேடம்' தரித்து தீர்ப்பு வழங்கியதற்கான காரணம்,
   1. தெளிவை ஏற்படுத்த   2. உண்மையை மறைக்க
   3. நம்பிக்கையை ஏற்படுத்த   4. அரசனை மதிக்க.

5. 'புதையலில்' யாருக்கு உரிமை இருக்கிறது ?
   1. வாங்கியவருக்கு   2. விற்றவருக்கு   3. இருவருக்கும்   4. அரசாங்கத்திற்கு

2. பின்வரும் சொற்களுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	அகவை முதிர்ந்து	....	....
2.	வெண் தாடி	....	....
3.	என் மகன்	....	....
4.	அறிவுடை நம்பி	....	....
5.	பொற்காசு	....	....
6.	அறிவொளி	....	....
7.	அறிவுக்கண்கள்	....	....
8.	நல்லதீர்ப்பு	....	....
9.	நரை முது	....	....

3. பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் தருக.

1. உரிமை ....
2. நேர்மை ....
3. குலம் ....
4. கள்வன் ....
5. தீர்ப்பு ....
6. அதிர்ச்சி ....
7. விளைச்சல் ....
8. பொற்காசு ....
9. காவலன் ....
10. அரியணை ....

4. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

1. அறிவுடைய நம்பி ....
2. பொற்காசு ....
3. வெண்தாடி ....
4. அவையினர் ....
5. சான்றோர் ....

5. பின்வருவன யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது என எழுதுக.

1. 'பெரியவர்களே! உங்களுக்கு என்ன வழக்கு?'
   யாரால் : ....
   யாருக்கு : ....
   எச்சந்தர்ப்பத்தில் : ....

2. 'என்ன? அரசர் சொன்ன அந்த நீதிபதி இன்னும் வரவில்லையே?'
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

3. 'அரசே! அவர்கள் வழக்கை விசாரிக்காமலேயே திருப்பி அனுப்பி விட்டீர்களே, காரணம் ஏதும் விளங்கவில்லையே?'
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

5. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.

1. அறிவுடை நம்பி என்பவர் யார்? அவர் மணமக்களுக்குப் பரிசாக அளித்த பொருள் யாது?
....

2. மன்னன் நன்னவனின் தீர்ப்பு யாது?
....

3. இளநாகனா, பூங்குன்றனா சிறந்தவர்?
....

4. உமக்கு புதையல் கிடைத்திருந்தால் யாது செய்வீர்?
....

5. இந்த நாடகத்திலிருந்து நீர் கற்றுக் கொண்ட பாடம் யாது?
....

6. தீர்ப்பு நீதியாக வழங்கிய மன்னனின் பெயர் யாது?
....

12. மணிமேகலை

12.2 செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மணிபல்லவத்தில் கண்விழித்த மணிமேகலை புதிய இடம் என அறிந்து வருந்தினாள். அப்போது, அவள் முன்னே புத்த பீடிகை தோன்றிற்று. அது தன்னைத் தரிசித்தோருக்குப் பழம் பிறப்பு உணர்த்தவல்லது. அதைக் கண்டு மணி மேகலை தொழுதாள். அதன் மூலம் அவள், தான் முற்பிறப்பில் இரவிவர்மன் மகளாக இலக்குமி என்ற பெயரோடு பிறந்து இராகுலனை மணந்ததையும், அவன் திட்டி விடம் என்ற பாம்பால் இறந்ததையும், அவனோடு தீயிற் புகுந்ததையும் உணர்ந்தாள். அப்போது அங்கு மணிமேகலா தெய்வம் தோன்றி, புத்த பீடிகையைப் பூசித்து வணங்கிற்று. அது முற்பிறப்பில் அவள் கணவனாயிருந்த இராகுலனே உதயகுமாரனாகப் பிறந்திருக்கிறான் என்று கூறிற்று. பின்னர், "நீ சமய வாதிகளுடைய கொள்கைகளை அறிய வேண்டும். உன் இளமைக் கோலம் இருந்தால் பிறர் உனக்குச் சமய உண்மைகளைச் சொல்லார்" என்று கூறி, வேற்று வடிவம் கொள்வதற்கும், ஆகாய வழியே செல்வதற்கும் பசியின்றி இருப்பதற்குமான மந்திரங்களை உபதேசித்துச் சென்றது.

1. 'மணிமேகலை' என்பவள் யார்?
   ....
2. புத்தபீடிகையின் செயல் யாது?
   ....
3. முற்பிறப்பு என்றால் என்ன?
   ....
4. புத்தபீடிகையைப் பூசித்து வணங்கியது யார்?
   ....
5. புத்தபீடிகை உபதேசித்த மந்திரங்கள் யாவை?
   ....

2. பின்வரும் அருஞ்சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. அட்சய பாத்திரம் ....
2. முற்பிறப்பு ....
3. காலவேகம் ....
4. பளிங்கு மண்டபம் ....
5. ஆதிரையில்லம் ....

3. பின்வருவனவற்றிற்கு உவமேயம் கூறுக.

1. கற்பு விசேஷம் ....
2. கடும் பஞ்சம் ....
3. பழம்பிறப்பு ....
4. இளமைக்கோலம் ....
5. அமுதசுரபி ....

6. குலதெய்வம் ....

7. மணிபல்லவம் ....

8. அறச்சாலை ....

9. முதற்பிச்சை ....

10. காலவேகம் ....

4. பின்வருவற்றிற்கு ஒத்த வடிவம் தருக.

1. பளிங்கு ....
2. முரசு ....
3. மலர்வனம் ....
4. மாயவித்தை ....
5. கற்பு ....
6. அமுதசுரபி ....
7. பிக்குணி ....
8. கொள்கை ....
9. மறுபிறப்பு ....
10. விசேஷம் ....

5. பின்வருவனவற்றுள் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. யானையின் பிடரியில் முரசை ஏற்றி இந்திர விழாக் கொண்டாடுமாறு முரசறைந்தான்.
   இதில் பிடரியில் என்பது,
   1. பெயரெச்சம் 2. வினையெச்சம் 3. எச்சவினை 4. பெயர்ச்சொல்

2. மணிமேகலையின் உருவத்தைத் தெரிந்து கொண்டான் உதயகுமாரன்.
   இதில், மணிமேகலையின் என்னும் சொல்லுருபு
   1. நான்காம் 2. இரண்டாம் 3. ஐந்தாம் 4.மூன்றாம் வேற்றுமைக்குரியது.

3. எடுக்க எடுக்கக் குறையாமல் சோற்றுத்திரள் பெருகி வந்தது. இதில் வந்த உரிச்சொல்,
   1. எடுக்க எடுக்க 2. பெருகி 3. சோறு 4. திரள்.

4. 'புத்தபீடிகை' என்பது,
   1. ஆண்பால் 2. பெண்பால் 3. இருபாற் பொதுப்பெயர் 4. கடவுள் பெயர்.

5. 'மணிமேகலை' எனும் பாடத்தில் வரும் மணிமேகலை,
   1. ஒரு பிக்குணி 2. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
   3. பௌத்த சமய பிக்குணி 4. ஒரு நடனக்காரி.

6. பின்வருவன யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது என எழுதுக.

1. "ஒன்றாலும் அவள் கலங்காமல் இருந்ததைக் கண்டு
   அஞ்சி தன்னை மன்னிக்கும்படி வேண்டினாள்"
   யார் : ....
   யாருக்கு : ....
   எச்சந்தர்ப்பத்தில் : ....

2. "இப்பாத்திரம் ஆபுத்திரனிடம் இருந்து இங்கு வந்தது. இது கொண்டு உலகத்தின் பசியைப் போக்கும் தர்மத்தை நீ செய்".

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

3. "இங்கு வருவாள், உங்கள் முற்பிறப்பை அவள் அறிந்து வருவாள்"

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

4. "உன் மனத்திருள் நீங்குக" என்று வாழ்த்தி அவள் உள்ளத்தில் ஞான ஒளியை ஏற்றிவைத்தார்.

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

7. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மணிமேகலையின் அறப்பணிகள் மூன்று கூறுக.

....

2. உதயகுமாரன் என்பவன் யார்?

....

3. மணிமேகலையின் பிறப்பைக் கூறுக.

....

4. அட்சய பாத்திரத்தின் சிறப்பென்ன?

....

5. திட்டிவிடம் என்னும் பாம்பு கடித்து இறந்தவன் யார்?

....

6. ஆதிரையின் கற்பு விசேஷடம் எத்தகையது?

....

7. பிக்குணிக் கோலமென்றால் என்ன?

....

8. மணிபல்லவத்தின் சிறப்பு யாது?

....

13. பொற்கிழி

13.2 செயல் நெறி

1. பின்வரும் சொற்களில் சரியான விடையின்கீழ் கோடிடுக.

1. புலவர்களின் கவிதைகளிலுள்ள சொல்லடுக்குகளையும் பொருளாழத்தையும் செவிமடுத்து மகிழ்ச்சியடைவான். இதில் பொருளாழத்தையும் என்பது,
   1. ஐந்தாம் உருபு 2. இரண்டாம் உருபு 3. நான்காம் உருபு 4. உருபு இல்லை.
2. புலவர் பெருமக்கள் கருத்துக்களை உள்ளடக்கிப் பாடுவார்கள். இதில் பெருமக்கள்,
   1. பெயர்ச்சொல் 2. உரிச்சொல் 3. இணைச்சொல் 4. இடைச்சொல்
3. கவிதைகளால் இயற்றக்கூடிய ஒன்று,
   1. ஆக்கல் 2. பறத்தல் 3. புதைத்தல் 4. உடைத்தல்.
4. புலவர்கள் நாத்திறம் பெற்றவர்கள். இதில் நாத்திறம் என்பது,
   1. நாத்தம் 2. நாத்திறம் 3. நாவின் திறமை 4. நாவின் நிறம்.
5. புலவர்கள் இனியவர்கள். இதில் இனியன் என்பது,
   1. தெரிநிலை வினைமுற்று 2. பண்புப்பெயர்
   3. குறிப்பு வினைமுற்று 4. தொழிற்பெயர்.

2. பின்வரும் பாடலின் கருத்தை உமது உரைநடையில் விளக்குக.

'தண்டாமல் ஈவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கால் ஈவது வண்மை – அடுத்தடுத்துப்
பின்சென்றால் ஈவது கால்கூலி; பின் சென்றும்
ஈயான் எச் சம்போல் அறு'.

கருத்து (உரைநடை) :..

....

3. சரியான விடை எழுதுக.

1. பொற்கிழி "கலகல" வெனும் ஓசையோடு அறுந்து கீழே வீழுந்தது. இங்கு கல கல என்பது என்ன மொழி?

   ....

2. அவன் சுற்றமும் பரம்பரைத் தொடர்பும் முழுமையாக அற்றுவிடும். இங்கு பரம்பரைத் தொடர்பு எத்தனையாம் உருபு?

   ....

3. 'கிளையும் எச்சம் அறும்' இதிலுள்ள உவமேயம் யாது?

   ....

4. ஔவையாரைக் கவியரசி என வாழ்த்திய மன்னன் யார்?

   ....

5. "முயற்சியால் ஈட்டப்பட்ட பொருளாகும்". இதில் முயற்சியின் எதிர்வடிவம்?

   ....

4. பின்வருவனவற்றிற்கு ஒத்தசொல் தருக.

1. லஞ்சம். ....
2. பொற்கிழி ....
3. சந்ததி ....
4. கவியரசி ....
5. சுற்றத்தவர் ....
6. அழிவு ....
7. கேட்போர் ....
8. தண்தாமரை ....
9. கிளை ....
10. சான்று ....

5. பின்வரும் வினாக்களுக்கு விபரமாக விடை தருக.

1. முன்னைய கால மன்னர்களின் பொழுதுபோக்கு யாது?
....
2. புலவர்களின் கவித்திறமை பற்றி ஆராய்க.
....
3. தெய்வத்தன்மை பெற்றுள்ள புலவர்கள் சிலரின் பெயர்களை எழுதுக.
....
4. 'பொற்கிழி' என்றால் என்ன?
....
5. 'சுயமுயற்சியால் ஈட்டப்பட்ட பொருள்' என்பது எதனைக் குறிக்கின்றது?
....

14. ☞ கடலை நம்பி ......

14.2 செயல் நெறி

1. பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வெறுவான வெளிமீது மழை வந்து சீறும்
வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறி மாறு பட நூறு சுழி வந்து சூழும்
நிலையான தரை நீரில் இலை போல் ஈடாடும்.

கோடை கொடும்பனி மழை குளிரை அஞ்சிக்
கோடிப் புறத்தினில் உறங்கி விடலாமோ
ஆடை களைந்து தலைமீதினில் அணிந்தோம்
ஆழக்கடல் தயிர் எனக் கடைய வந்தோம்.

1. 'வெறி கொண்ட புயல்' இதன் கருத்து யாது?
....
2. 'சுழி' என்றால் என்ன? அது எங்கு காணப்பட்டது?
....
3. 'நீரில்' என்ற சொல்லிலுள்ள வேற்றுமை உருபு எது?
....

4. 'கொடும்பனி' எக்காலத்தில் தோன்றும்?

....

5. 'கோடிப்புறம' என்ற சொல்லின் ஒத்தவடிவம் யாது?

....

6. தலைமீது அணியப்படும் ஆடையின் பெயர் யாது?

....

2. ஒத்தசொல் எழுதுக.

1. மழை .... 6. தயிர் ....
2. நெறி .... 7. கோடி ....
3. பனி .... 8. அஞ்சி ....
4. கரகங்கள் .... 9. சூழும் ....
5. சுழி .... 10. குளிர் ....

3. பின்வரும் சொற்களுக்கு உவமான உவமேயங்களைக் காண்க.

		உவமானம்	உவமேயம்
1.	சிறு நண்டு	....	....
2.	வாடை குளிர்ந்தது	....	....
3.	ஆடை களைந்தது	....	....
4.	கொடும் பனி	....	....
5.	ஆழக் கடல்	....	....

4. பின்வரும் அருஞ்சொற்களை வைத்து வசனம் அமைக்குக.

1. வாடை குளிர்ந்த ....
2. ஆடை களைந்த ....
3. சிறு நண்டு ....
4. கரகங்கள் ....
5. நெறிமாறு ....

5. பின்வரும் பாடலுக்குக் கருத்து எழுதுக.

சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும்
சிலவேளை இதைவந்து கடல் கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்.

கருத்து (உரைநடை):

....

....

....

15. இராமாயணம்

15.2 செயல் நெறி

1. பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அரக்கர் கோன் அதனைக் கேட்டான்
'அழகிற்றே ஆகும்' என்றான்
குரங்கினத் தலைவன் நின்றான்
கொற்றவர்க்(கு) உற்ற (து) என்றான்;
'இரக்கம(து) இழுக்கம்' என்றான்
இளையவன், 'இனி நாம் அம்பு
தூக்குவ (து) அல்லால் வே(று) ஓர்
சொல் உண்டோ? எனச் சொன்னான்.

1. இப்பாடல் வரிகளில் யாருடைய கருத்துக்கள் உள்ளன.
 ....
2. 'இரக்கமது இழுக்கம்' என்பதன் கருத்து யாது?
 ....
3. இராமாயணத்தில் இளையவனின் பெயர் யாது?
 ....
4. யாருக்கு இரக்கம் காட்டுவது தவறாகும் என்கிறது இப்பாடல்?
 ....
5. அரக்கர்கள் என்போர் யார்?
 ....

2. பின்வரும் சொற்களுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	புயத்துறை	....	....
2.	இரக்கமது இழுக்கம்	....	....
3.	செருக்களம்	....	....
4.	வீரன் வெஞ்சிலை	....	....
5.	அநுமன் கொல்	....	....

3. பின்வருவனவற்றுள் சரியானவற்றின் கீழ் கோடிடுக.

1. 'மாருதி அல்ல னாகில்' இதில் மாருதி என்பது,
 1. வில் 2. குரங்கு 3. அனுமான் 4. அம்பு

2. 'எயில் கடந்து இலங்கை எய்தி' அரக்கனது, இதில் அரக்கனது என்பது
 1. இரண்டாம் 2. நான்காம் 3. மூன்றாம் 4. ஆறாவது உருபாகும்.

3. அங்கதனைக் கண்களினின்று தீப்பொறி பறக்க நிமிர்ந்து பார்த்து, இதில் தீப்பொறி என்பதன் ஒத்த வடிவம்?
1. தீப்பந்தம் 2. தீப்பிழம்பு 3. அனல்பொறி 4. தீவட்டி

4. ஐம்பூதங்கள் எனக் கூறப்படுவது?
1. நிலம், நீர், காற்று, தீ, வான் 2. மெய், வாய், கண், மூக்கு, செவி.
3. கடல், காற்று, வாய், உறுப்பு, நிலம் 4. அகம், இடம்,கண், மெய், செவி.

5. 'உள்ளத்தில் உள்ள கள்ளத் தன்மை' இதில் உள்ள கள்ளத்தன்மை குறிப்பது?
1. உள்ளத்திலுள்ள நினைவை 2. உள்ளத்திலுள்ள களவை
3. உள்ளத்திலுள்ள மனதை 4. உள்ளத்திலுள்ள நினைவை.

4. பின்வரும் வாக்கியங்களுக்கேற்ப பாடல் வரிகளைத் தருக.

1. நீ இவனது தூதனாய் இருப்பதை விட்டு விட்டு, வானரத் தலைமை மேற்கொண்டு ஒழுகினால்,
பாடல் :..
2. 'கடலை முயன்று அணை கட்டிய போதும்' வராதவன் இராவணன்.
பாடல் :..
3. சப்தமிட்டான் அரண்மனை வாயிலில் அவர்கள் உடலைப் போட்டுக் காலால் மிதித்து பின்வருமாறு சொற்களைப் பகர்ந்தான்.
பாடல் :..
4. "இந்தத் தூதனைப் பிடியுங்கள், விரைந்து பரந்த பூமியின் மீது மோதுங்கள்"
பாடல் :..
5. "இவன் அறிவிலி என்று கூறுமாறு வாழ்ந்தான்"
பாடல் :..

5. பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறுக.

1. 'இந்த இராவணனை வெல்லத் தோன்றிய ஓர் காலனும் இருக்கின்றானோ?'
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில்: ....
2. உனக்கு நானே குரங்கு இனத்தலைவனாகும் பதவியைக் கொடுத்தேன்.
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில்: ....
3. பறிப்புண்டும் வந்தி லாதான்
இனிப்பொரும் பான்மை உண்டோ
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில: ....

4. சொன்னவை இரண்டின் ஒன்றே
துணி (க) எனச் சொல்லி (டு) என்றான்
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில்: ....

5. வேமின் போல்வன வீழ்வதன் முன்னமே
போமின், போமின் புறத்(து) என்று போயினான்.
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில்: ....

6. பின்வரும் வினாக்களுக்கு விபரமாக விடை எழுதுக.

1. அங்கதன் என்பவன் யார்? அவனை இராவணனிடம் தூது அனுப்புவதற்காக இராமன் தேர்ந்தெடுத்ததன் காரணம் யாது?
....
2. விபீஷணன் முதலியோர் கூறிய கருத்தைத் தருக.
....
3. அரக்கர் என்போர் யார்? அவர்கள் செய்த தீமைகள் யாவை?
....
4. இராவணன் அங்கதனை தன்வசமாக்க முனைந்ததை விபரமாகக் கூறுக.
....
5. அங்கதன் தூதுப்படலத்தின் முடிவு எவ்வாறு இருந்தது என்பதை விபரிக்குக?
....

16 . முடியாத கதைகள் பல

16.2. செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"க்கும்! என்ன மருந்து அது! பச்சைத் தண்ணி! அதைக் குடிக்கிறதுக்கு பைப்புத் தண்ணி புடிச்சாந்து குடிக்கலாம். கருமம்!" பொன்னம்மா பேசிக் கொண்டிருக்கையில் வேலாயுதம் வந்து வெளி வாயிற்படியில் நின்று வெளிப்பக்கம் எட்டிப் பார்க்கிறார். அடுத்த வீட்டுப்பையன் – எட்டு வயது ஆண்பிள்ளை திகம்பரனாக வாசல் முற்றத்திலுள்ள வேலியோரம் குந்திக் கொண்டிருக்கிறான். லயத்து நாயொன்றும் அவனருகே வாலையும் உடம்பையும் ஆட்டியபடி நிற்கிறது. தொங்கல் வீட்டுக் கந்தசாமி தேயிலைக் குச்சியால் பல்லைத் தேய்த்தபடி முக்காடிட்ட தலையுடன் தோட்டத்துப் பக்கமிருந்து வருகிறார். இன்னும் இருள் முற்றாக விலகாத அந்த அதிகாலை நேரத்தில் லயம் வேறு சந்தடியின்றி உறங்கிக் கிடக்கிறது.

1. மருந்துக்கு என்ன மாதிரியான வசை மொழி கூறப்படுகிறது?
....

2. ‘லயம்’ என்பதன் ஒத்தவடிவம் யாது?

....

3. லயம் உறங்கிக் கிடக்கிறது. இதன் கருத்தை உமது உரைநடையில் கூறுக.

....

4. ‘புடிச்சாந்து’ இதன் சரியான உச்சரிப்பு வடிவம் யாது?

....

5. இந்தப் பந்தியிலிருந்து நீர் கண்ட அனுபவங்களைக் கூறுக.

....

2. பின்வரும் சொற்களுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

	உவமானம்	உவமேயம்
1. சுருண்டு இருமி	....	....
2. வாய்க்குருசி	....	....
3. கோத்தகொப்பு	....	....
4. சத்து மருந்து	....	....
5. விடியங்காட்டி	....	....

3. பின்வரும் பிழையான சொற்களை திருத்தி எழுதுக.

1. பிரசாவுருமச்சங்கதி ....
2. காலுல ....
3. கண்டாக்கையா ....
4. நனைஞ்சு போச்சு ....
5. கட்டுப்போயலை ....
6. புடிச்சாந்து ....
7. காம்பிரா ....
8. கண்ணாரக்காண..................................
9. இன்னைக்கோ ....
10. சொல்றே ....

4. பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.

1. சலிப்பு ....
2. பயன் ....
3. சிந்தனை ....
4. மூடக்கு ....
5. பாரம் ....
6. சலிப்பு

5. பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் எழுதுக.

1. விளைவுகள் ....
2. துரிதகதி ....
3. சிபாரிசு ....
4. கருமம் ....
5. பாவனை ....
6. உரிமை ....

6. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. பொன்னம்மாவின் பிறப்பு விடயம் பற்றிக் கூறுக.

....

2. அறியாமையின் மந்தநிலை, அரசியலின் குழறுபடிகள் இதன் சரியான கருத்தாழத்தை விளக்குக.

....

3. ‘பிரஜாவுரிமை’ பற்றி நீர் அறிந்ததை எழுதுக.

....

4. வேலாயுதத்தின் கண்முன்னே வெடித்த குண்டு யாது?

....

5. இக்கதையிலிருந்து நீர் உணர்ந்து கொண்ட படிப்பினைகள் யாவை?

....

17. வள்ளுவரும் பாரதியாரும்

17.1 செயல் நெறி

1. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பொருளி லார்க்கிலை இவ்வுல கென்ற நம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்;
பொருளி லார்க்குஇன்ப மில்லை துணையிலை;
பொழுதெ லாம்இடர் வெள்ளம்வந் தெற்றுமால்;
பொருளி லார் பொருள் செய்தல் முதற்கடன்

1. இப்பாடல் யாரால் பாடப்பட்டது?

....

2. இப்பாடலிலிருந்து நீர் அறிந்த பாடம் எது?

....

3. பொய்ம்மொழி, இடர்வெள்ளம் இவற்றுக்கு உவமானம் கூறுக.

....

4. எது முதற்கடன் என புலவர் கூறுகிறார்?

....

5. இப்பாடலின் கருத்தை உமது உரைநடையில் எழுதுக.

....

2. பின்வருவனவற்றிற்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. தெள்ளத்தெளிய உணர்த்துகின்றார் திருவள்ளுவர். இதில் தெள்ளத்தெளிய என்பதன் ஒத்த வடிவம் ?
   1. தெளிவாக 2. வடிவாக 3. அழகாக 4. வெட்டவெளிச்சமாக
2. மனமாரப் புகழ்ந்து போற்றுகின்றார். மனமார என்பதன் எதிர்வடிவம்,
   1. மனசார 2. மனம்கொதித்து 3. மனமுவந்து 4. மனவேதனையால்
3. ‘சினம் எனும் நெருப்பு உள்ளத்தில் மூளுமாயின்’ இதிலுள்ள உவமானச் சொல்,
   1. சினம் 2. நெருப்பு 3. மூளுமாயின் 4. நெருப்பு உள்ளம்
4. ‘விஞ்ஞான வித்தகருள் சாலச் சிறந்த பெருமை’ இதில் உரிச்சொல்,
   1. விஞ்ஞான 2. கருள் 3. சால 4. பெருமை
5. ‘அவன்குலத்தை வேரறுக்கும் படைக்கலமாயிற்று’ இதில் படைக்கலம்,
   1. படைகள் 2. கப்பல் 3. போர்வீரர் 4. யுத்தகளம்.

3. பின்வரும் பாடல் வரிகளுக்குப் பொருள் எழுதுக.

1. கொல்வதற்கு வழியென நான் குறித்திட் டேனே.

   ....

2. செல்வத்தைத் தேய்க்கும் படை

   ....

3. கண்ணற்ற தீவினிலே

   ....

4. எமப் புணையைச் சுடும்

   ....

5. பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்

   ....

4. பின்வரும் சொற்களுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	வெய்துமால்	....	....
2.	அனுதினம்	....	....
3.	பெண்பாவம்	....	....
4.	கண்ணற்றதீவினலே	....	....
5.	அழுதகண்ணீர்	....	....

5. பின்வரும் வினாக்களுக்கு விடைகளை விரிவாக எழுதுக.

1. இந்திய மாதர் படும் துயரை பாரதியார் எவ்வாறு எடுத்துக் கூறுகிறார்?

   ....

2. செல்வச் செருக்குடைய வல்லரசை எது அழிக்கும் என திருவள்ளுவர் கூறுகிறார்?

   ....

3. பாஞ்சாலி வடித்த கண்ணீரால் விளைந்த பயன் என்ன?

   ....

4. அதேபோல கண்ணகி வடித்த கண்ணீரால் விளைந்த பயன் என்ன?

   ....

5. வள்ளுவப் பயனை பாரதியார் வாழ்த்தும் முறையைத் தருக.

   ....

6. திருக்குறளின் பயன்களைத் தருக.

   ....

7. பொருளில்லாவிடில் இவ்வுலகில் எவ்வாறு வாழலாம்?

   ....

6. பின்வருவன யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது எனக் கூறுக?

1. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி,

   யாரால் : ....

   யாருக்கு : ....

   எச்சந்தர்ப்பத்தில் : ....

2. கோனாகிச் சாத்திரத்தை ஆளும் மாண்பார்
ஜகதீச சந்திரவசு கூறுகின்றான்.
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

3. காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

4. 'காட்டினில் பெண்கள் புழுங்குகின்றார்'
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

5. பெண்டிர்தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

18. நீதிப் பாடல்கள் II

18.2. செயல் நெறி

1. பின்வரும் பாடல்களை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை.

பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம் – கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கு மாகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

1. பாடல்களில் கூறப்பட்டுள்ள சில உவமானச் சொற்களை வரிசைப்படுத்துக.
....
2. 'எல்லோர்க்கும் பெய்யும் மழை' இதன் கருத்து யாது?
....

3. பண்டு என்பதன் கருத்து யாது?

....

4. ஏற்ற கருமச் செயலாக எது கூறப்படுகிறது?

....

5. 'நெல்லுக்கு இறைத்த நீர்' என்ன செய்வதாகப் புலவர் கூறுகிறார்?

....

2. பின்வருவனவற்றிற்கு ஒத்த சொல் தருக.

1. விண்டுமி ....
2. கவி ....
3. உறுமீன் ....
4. வான்கோழி ....
5. கொக்கு ....
6. நெஞ்சம் ....
7. இணங்கு ....
8. தொல்லுலகில் ....
9. மழை ....
10. மேன்மக்கள் ....

3. பின்வருவனவற்றிக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	கன்மேல் எழுத்துப்போல	....	....
2.	மேன் மக்கள்	....	....
3.	முளைப்பதரிசி	....	....
4.	ஏற்ற கருமம்	....	....
5.	தொல்லுலகில்	....	....
6.	வான்கோழி	....	....
7.	கானமயில்	....	....
8.	நீட்டோலை	....	....
9.	பொல்லாச்சிறகு	....	....
10.	ஓடுமீன்	....	....

4. பின்வருவனவற்றிற்குச் சரியான சொல்லின்கீழ்க் கோடிடுக.

1. ஈரமில்லாத நெஞ்சத் தார்க்கீந்த உபகாரம் . இதில் ஈரமில்லாத
   1. இரக்கமில்லாத 2. நனைந்த 3. நனையாத 4. ஈரலிப்பில்லாத
2. இணங்கி இருப்பதுவுந்தீது இதில் இணங்கி என்பதன் எதிர்வடிவம்
   1. இணங்கி 2. அணங்கி 3. பிணங்கி 4. சுணங்கி
3. சுட்டாலும் வெண்மை தருவது,
   1. கடல் 2. முத்து 3. பவளம் 4. சங்கு
4. 'ஓடுமீன்ஓட உறுமீன் வருமளவும்' இதில் உறுமீன் என்பது
   1. பெரிய மீன் 2. நல்ல மீன் 3. சின்ன மீன் 4. அழகான மீன்
5. கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி. இதில் கான மயில் என்பது,
   1. காட்டுக்கோழி 2. காட்டுமயில் 3. காட்டு வான்கோழி 4. காட்டுக்குயில்

5. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. அரிசி முளைக்காமல் இருப்பதற்கான காரணம் எதுவெனப் புலவர் கூறுகிறார்?

....

2. 'நீர்மேல் எழுத்து' எதற்கு உவமானமாகக் கூறப்பட்டுள்ளது?

....

3. நல்லோரின் குணங்கள் எவ்வாறிருக்கும்?

....

4. கெட்டாலும் மேல் மக்கள் மேல்மக்களே என்பது எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

....

5. நல்லவர்களோடு சேர்வதால் ஏற்படும் பயன் யாது?

....

6. மழை பொழியக் காரணமாகக் கூறப்படுவது யாது?

....

7. நல்லாருக்குச் செய்த உபகாரம் எது போன்றது?

....

8. 'மரம்' என மட்டம் தட்டப்படுபவர் யார்?

....

19 . அரிச்சந்திர புராணம்

19.2. செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இதைக் கேட்ட விசுவாமித்திரர், பாதகனை, பலதார விருப்பமுள்ளவனை, வீணனை, பொய்யானை, நிறைவும் பொறுமையும் சிறிதுமற்றவனை, எல்லாத் தீமைக்கும் உரியவனை இவ்விடத்தில் நல்லவன் என்றுரைத்தாயே என்று கூறியதும் வசிஷ்டர் மனம் வருந்தித் திட்டினார். இதைக்கேட்டுச் சகிக்காத விசுவாமித்திரர் நான் செய்யப் போகும் சோதனையில் அவன் வெற்றியடைந்தால் என் தவப்பயனில் பாதியை அரிச்சந்திரனுக்கே கொடுத்து விடுவேன் என்று சபதம் செய்தார். அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைப்பதற்காகப் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்தார். இதனால் அரிச்சந்திரன் தனது நாடு நகர்களை இழந்தான். மனைவியையும் மகனையும் கூவி விற்றபோது காலகண்டன் என்ற கொடிய குணமுடைய அந்தணன் அவர்களை அடிமைகளாக வாங்கினான்.

1. 'பாதகனை' பலதார விருப்பமுள்ளவனை என்றவற்றிற்கு கருத்துத் தருக.

....

2. வஷிட்டர் என்பவர் யார்?

....

3. விசுவாமித்திரர் என்ன கூறினார்?

....

4. நாடு நகர் என்றதற்கு உவமானம் கூறுக.

....

5. 'அந்தணன்' என்ற சொல்லின் ஒத்த வடிவம் யாது?

....

2. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. பாவியேன் மகனே, இதில் பாவியேன் என்பது,
   1. 2 ம்வேற்றுமை 2. 4 ம்வேற்றுமை 3. 5 ம்வேற்றுமை 4. 6 ம்வேற்றுமை

2. வல்லியும் மகனும் மறையவன் மனை சேர்ந்தனர். மறையவன் என்பது,
   1. அந்தணன் 2. பாணன் 3. வண்ணான் 4. பரோபகாரி

3. 'அரம்பையர்' என்ற சொல்லின் ஒத்த வடிவம்,
   1. அந்தப்புரம் 2. பெண்கள் 3. தேவலோகப்பெண்கள் 4. அகழிகைகள்

4. 'திறலோன்' என்பதன் எதிர்மறைச் சொல்
   1. பலசாலி 2. வீரமுள்ளவன் 3. பலவீனன் 4. உலோபி.

5. 'அரவுகடித்து அரசிளங்கோ இறந்தான்'. இதில் இறந்தான் என்பது,
   1. வினைச்சொல் 2. வினைமுற்று 3. வினையெச்சம் 4. வினைப்பயன்

3. பின்வரும் பொருள்களுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	மரம்போல்	....	....
2.	அறவும்பாவி	....	....
3.	கரவின் அழல்	....	....
4.	நெடுவேல்	....	....
5.	விறல் மன்னன்	....	....
6.	வேங்கோபயானன்	....	....

4. பின்வரும் பாட்டுக்குப் பொருள் தருக.

அலை(வு) இலா அரிச்சந்திரற் (கு) அல்லது
தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் வோதுவ தோ? என
உலையின்மீது மெழுகொத்(து) உருகினாள்

கருத்து : ....
....

5. பின்வரும் அருஞ்சொற்களுக்கு ஒத்தவடிவம் எழுதுக.

1. தொடி ....
2. நல்லை ....
3. பல்லம் ....
4. பொறை ....
5. ஆழி ....
6. பொற்பு ....
7. நிற்பற்றி ....
8. கான் ....
9. மங்கலம் ....
10. நாண் ....

6. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. அரிச்சந்திர புராணத்தை இயற்றியவர் யார்?
....
2. 'காலகண்டன்' என்பவன் யார்? அவனது வீட்டில் தொண்டு புரிந்தோர் யாவர்?
....
3. வஷிட்டர் மனம் வருந்தித் திட்டுவதற்குக் காரணம் யாது?
....
4. 'அலமரும் உடலம் ஒத்தான்' இதன் கருத்து யாது?
....
5. அந்தணன் எப்பொழுது சந்திரமதிக்கும்அவளது மகனுக்கும் கூழ் கொடுத்தான்.
....

7. பின்வருவன யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது எனக்கூறுக.

1. சத்தியம் முதலிய குணங்களிற் சிறந்த பூலோக அரசன் யாவன்?
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

2. 'எல்லாத் தீமைக்கும் உரியவனை இவ்விடத்தில் நல்லவன் என்றுரைத்தாயே'
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

3. "எங்கே என் ஆசை மகன்? என்றுரைக்கில்"
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

4. "கரவின் அழல் சுடுவது உனக்கு அடைவோ"
யாரால் : ....
யாருக்கு : ....
எச்சந்தர்ப்பத்தில் : ....

20. பழையதும் புதியதும்

20.1. செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் வேறு கிடைத்துவிட்டால் பேச வேண்டுமா? கார்த்திகேசு சற்று விபரமாகக் கதையைச் சொன்னான். "நடந்தது என்ன தம்பி, எல்லாம் கால வித்தியாசம், அவ்வளவு தான். கார் வந்தது. வண்டி போயிற்று. புதியதைக் கண்டதும் பழையதை கைவிட்டார்கள். புதுப் பெண்டாட்டியைக் கண்டதும் வயசான தாய்க்கிழவியைச் சாகக் கொன்று விடுகின்றதா? ஊர் ஊராகக் கார்கள் வந்து நின்ற அந்த நாட்களில் என்னைப் போலக் கூலி வண்டி வைத்துப் பிழைத்தவர்கள் எத்தனை பேர் கஷ்டத்துக்குள்ளானார்கள் தெரியுமா? தளுக்கு மினுக்கித் திரியும் இந்த மோட்டார்க் கார்களைக் காணும் பொழுது எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. அரிச்சந்திர மகாராசாவின் பூச்சரக் குடையை அபகரித்து வரும்படி விசுவாமித்திர முனிவர் அனுப்பினாரே நாட்டியப் பெண்கள். அவர்களுடைய ஞாபகம் வருகிறது தம்பி. அந்நியப் பிசாசுகளைப் பார்க்கும் பொழுதெல்லாம்! ஆனால் எங்களுடைய மாட்டு வண்டிலோ அந்நிய முதலுமல்ல. அந்நியச் சொத்துமல்ல.

1. 'வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் வேறு கிடைத்து விட்டால்' இதிலுள்ள உவமான உவமேயங்களைத் தருக.

   ....

2. 'புதியதைக் கண்டதும் பழையதைக் கைவிட்டார்கள்'. இதிலிருந்து நீர் கற்றுக் கொண்ட பாடம் என்ன?

   ....

3. அந்நியப் பிசாசுகளாக யார் சித்தரிக்கப்படுகிறார்கள்?

   ....

4. வயசான தாய்க்கிழவி. இதிலுள்ள பெயரெச்சம் யாது?

   ....

5. அந்நிய முதலுமல்ல, அந்நிய சொத்துமல்ல. இதன் கருத்தை எழுதுக.

   ....

2. பின்வருவனவற்றுள் சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. வண்டிக்காரர்களும் 'மறுமலர்ச்சி' அடைந்தார்கள். மறுமலர்ச்சி என்பது,
   1. மனமலர்ச்சி 2. நிம்மதி 3. நல்லகாலம் 4. நம்பிக்கை.
2. 'காவோலைகள்' அழுகின்றன. காவோலையின் எதிர்ப்பதம்
   1. சாவோலை 2. குருத்தோலை 3. மணியோலை 4. சிறியஓலை
3. அந்நிய மோகம் வேகமாகப் பரவி வருகிறது. இதிலுள்ள உவமானம்,
   1. வேகமாக 2. அந்நிய மேகம் 3. அந்நிய 4. மேகம்
4. 'செம்புச்சதம்' வெளியே போவதுமில்லை. இதில் செம்புச்சதம் என்பது,
   1. அடைமொழி 2. உரிச்சொல் 3. இணைமொழி 4. தனிமொழி
5. "அது என்ன காத்தி அண்ணே?" என்பதில் காத்தி என்பதன் சரியான வடிவம்,
   1. கார்த்திகேசு 2. கார்த்திகேசன் 3. காத்திராயன் 4. கார்த்திகாயன்.

3. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.

1.	முகஸ்துதி	....	6.	தளும்பு	....
2.	சுட்டியன்	....	7.	அடையாளம்	....
3.	கைராசி	....	8.	பிடாரி	....
4.	சண்டிமாகு	....	9.	அட்டகாசம்	....
5.	நாகரீகம்	....	10.	கோலம்	....

4. பின்வரும் சொற்களுக்கு உவமான உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	ஓய்வு ஒழிச்சல்	....	....
2.	தவில்வித்துவான்	....	....
3.	வீசர்வேலை	....	....
4.	மேளக்கச்சேரி	....	....
5.	பற்றி எரிகிறது	....	....
6.	மறுமலர்ச்சி	....	....
7.	கறுப்பன் கதை	....	....

5. பின்வருவனவற்றிற்கு சரியான விடை தருக.

1. 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைக் கலைக்கப் பார்த்ததாம்' இந்த வரிகளின் உட்கருத்து யாது?
   ....
2. 'வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் வேறு கிடைத்து விட்டால்' ... இதனை வைத்து வசனம் அமைக்குக.
   ....
3. சுட்டிமாடுகள் சுட்டியன்களாகி வீடுவது எதனால்?
   ....
4. அரிச்சந்திரனின் பூக்குடையைப் பறித்தவர் யார்?
   ....
5. நீதிக்கு ஒரு இடம் உலகில் என்றைக்கும் இருக்கவே இருக்கிறது. இது எந்தளவிற்கு உண்மையானது?
   ....
6. வண்டிக்காரர்கள் மறுமலர்ச்சி அடைந்ததற்கு காரணம் யாது?
   ....
7. 'அனுகுண்டு கண்டு பிடித்திருக்கிறார்களாம்' எனக் கூறப்பட்டதற்கு காரணம் யாது?
   ....
8. 'நெடுமூச்சு' பிறப்பதற்கு காரணம் யாது?
   ....

21. காவியத் தலைவி கதீஜா நாயகி

21.1. செயல் நெறி

1. பின்வரும் பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"பேரறிவு எவையும் செம்மை
 பெருந் தொளிர் வனப்பும் வெற்றி
வீரமும் திறலும் உண்மை
 விளங்கும் வாசகமுங் கல்விச்
சாரமும் பொறையும் மிக்க
 தரும நற்குணமும் யார்க்கும்
வாரமும் முகம்மதின் பால்
 வந்தடைந்து இருந்ததன்றே".

1. "பேரறிவு" என்று கூறப்படுவதற்குக் காரணம் யாது?
 ....
2. இப்பாடல் வரிகளிலுள்ள உவமான, உவமேயங்களைக் கூறுக.
 ....
3. நற்குணங்கள் சில கூறுக.
 ....
 ....
4. வனப்பும் வெற்றி. இதில் வனப்பு என்ற சொல்லின் ஒத்த வடிவம் யாது?
 ....
5. இப்பாடலின் கருத்தை உமது உரைநடையில் எழுதுக.
 ....

2. பின்வருவன சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் கூறுக.

1. கதீஜா நாயகி அவர்கள் உடலும் உயிரும் போல ஒன்றி கணவருடன் வாழ்ந்து வந்தாள். (சரி – பிழை)
2. ஈரம், இரக்கம், அன்பு, பண்பு யாவும் நற்குணங்களுக்குப் பொருந்தாது. (சரி – பிழை)
3. அபூதாலிப், பெருமானாரின் பெரிய தந்தையாவார். (சரி – பிழை)
4. 'கற்பு' என்னும் அணிகலன் பெண்களுக்கேற்றதல்ல. (சரி – பிழை)
5. உமறுப்புலவர் 92 படலங்கள் பாடியுள்ளார் (சரி – பிழை)

3. பின்வரும் பாடல் அடிகளின் கருத்தை உமது உரைநடையில் எழுதுக.

1. சாரமும் பொறையும் மிக்க
 தரும நற்குணமும் யார்க்கும்
 உரைநடை :.
 ....
 ....

2. கூன் கடவளையார் வெண்பாற் குரை கடலமிர்துஞ்சோதி
வான் கடலமிர்து மொன்றாய் வடிவேடுத் தனைய பாவை.
உரைநடை :
....
....

3. கொவ்வைச் செவ்விதழ்
சிறுவெண்மூரல் அனப்பெடை கதீஜா.
உரைநடை :
....
....

4. கூருடைக் கயல்களோடிக் குதித்தன
குதித்துத் தேக்கி
உரைநடை :
....
....

5. கோக்குல வீதி நீந்திக்
கொழுமனையிடத்திற் சார்ந்தார்.
உரைநடை :
....
....

4. பின்வரும் சொற்களுக்கு உவமான, உவமேயங்களைக் கூறுக.

		உவமானம்	உவமேயம்
1.	புகழ்தறாய்	....	....
2.	தொங்குங்குலம்	....	....
3.	விரைகமழ்	....	....
4.	அண்டர்வாழ்த்து	....	....
5.	மரக்கடலனைய	....	....

5. பின்வரும் வினாக்களுக்கு விபரமாக விடை தருக.

1. கதீஜா நாயகியின் அருமை பெருமைகளைக் கூறுக.
....
2. நாயகம் (ஸல்) அவர்கள் எதற்காக கதிஜா நாயகியைத் திருமணம் செய்தார்?.
....
3. ஹீரா குகையில் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்ற இறையருள் யாது?
....
4. நாயகம் (ஸல்) அவர்கள் தமது மனைவி கதீஜா நாயகி அவர்கள் பற்றிக் கூறிய அருங்கருத்துக் களைத் தருக.
....

5. “ஒரு தனிப் பிறந்து கையில் உறுபொருள் இன்றி இந்தப் பெருநிலத்து இருந்து வாழ்தல் பெருமை”. இதன் கருத்தை எழுதுக.

....

6. நாயகம் (ஸல்) – கதீஜா நாயகி ஆகியோரின் இல்லற வாழ்வின் சிறப்புக்கள் சிலவற்றை எடுத்துக் கூறுக.

....

7. சீறாப்புராணம் யாரால் இயற்றப்பட்டது?. அதில் எத்தனை படலங்கள் உள்ளன?.

....

6. பின்வருவன யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது எனக் கூறுக.

1. ‘முஹமதுவை அவர் மனைக்கு அனுப்புவதே நலம் பயப்பது’

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

2. ‘நானூறாயிரம் நாவிருந்தால்தான் அவரது பெருமைகளை ஒரு சிறிதளவேனும் உரைக்க முடியும்’

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

3. ‘நபி எனும் பட்டம் நும்பால்
கொண்டலே! குதா இன்று ஈந்தான்’

யாரால் : ....

யாருக்கு : ....

எச்சந்தர்ப்பத்தில் : ....

22 . தங்கம்மா

22.2 செயல் நெறி

1. பின்வருவனவற்றை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"நல்ல வயிற்றிலிந்த
நரம்பு பிறந்திருந்தால்
இல்லாமல் நோய் இவளே
எழுந்திருப்பாள்! நான் மற்றப்
பிள்ளைகளைப் பார்ப்பதுவா – இவள்
பிணிதன்னைப் பார்ப்பதுவா?
நெல்லுப்பாய் உழைப்பாலும்
நீங்காத பட்டினியே"
இப்படியாய்ச்
சொல்லியதும் நீதான்
சுடுமனத்துள் நீறுபூத்த
கொள்ளியினால் ஆ! நீ இக்
குவலயத்தைச் சுட்டெரித்தாய்!.

1. பிணி என்பதன் ஒத்த வடிவமெனக் கூறப்படுவது,
   1. மூப்பு 2. பிணிப்பு 3. நோய் 4. பில்லி
2. குவலயம் என்பது பல கருத்துக்களுடைய ஒரு சொல் அதாவது,
   1. பங்கயம், கடல் 2. தாமரை,பூமி 3. தாமரை,கடல் 4. பங்கயம்,குவலயம்
3. வயிற்றிலிந்த என்பதனைப் பிரித்து எழுதினால்
   1. வயிற்றில் + இந்த 2. வயிற்று + இந்த
   3. வயிற்றில்+ இந்த 4. வயிறு + இந்த
4. சுடுமனத்துள் நீறுபூத்த என்பதில் 'நீறு' என்பது,
   1. சாம்பல் 2. நன்கு எரிந்த 3. மிக்க கவலை 4. நிலையில்லாமல்
5. நோய் இவளே எழுந்திருப்பாள். இதில் நோய் என்பதன் எதிர்வடிவம்
   1. பிணி 2. சுகம் 3. நலம் 4. வருத்தம்.

2. பின்வருவனவற்றுக்கு ஒத்த வடிவம் தருக.

1.	பறட்டை	....	6.	மெத்தச்	....
2.	குவலயம்	....	7.	கொழுமனை	....
3.	கொள்ளி	....	8.	காரிகை	....
4.	சிரங்கை	....	9.	பேரொளி	....
5.	நெல்லுப்பாய்	....	10.	ஆரணம்	....

3. பின்வருவனவற்றின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பிஞ்சு மகன் முந்தானை புடைவை பிடிக்க. இதில் முந்தானை என்பது,
   1. தாவணி 2. முதல்சீலை 3. சீலைத் தலைப்பு 4. சீலைநுனி
2. இரு கைகளும் சூம்பற் கால்களும். இதில் 'சூம்பற்' என்ற சொல் குறிப்பது,
   1. நொண்டிக்கால் 2. வளைந்தகால் 3. மெலிந்தகால் 4. இயக்கமில்லாத கால்.
3. மெத்தச் சோகம் கலந்த மிருதும் முகவெட்டும். இதில் வந்த உவமானம்,
   1. மெத்தச் சோகம் 2. மிருதும் முகம் 3. கலந்த மிருது 4. சோகம் கலந்த
4. பறட்டைத் தலையும் அதில் பழஞ்சீலை முடிச்சும். இதில் பறட்டையின் எதிர்வடிவம்
   1. ஒழுங்கு 2. குப்பை 3. அடக்கம் 4. அகங்காரம்
5. பாலர் வகுப்பில் நான் பார்த்தேன்! இதில் பாலர் எனப்படுவோர்,
   1. 4 வயது 2. 5 வயது 3. 6 வயது 4. 8 வயது

4. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஆஸ்பத்திரியின் நிலைமைகளை விபரமாகக் கூறுக.

   ....

2. எந்த நோயால் பிள்ளை அவதியடைகிறது? அந்நோய் வந்ததால் உடல் நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?

   ....

3. 'செல்லரித்த வாழ்க்கையதன் சிதவல்கள்' இதன் கருத்தை உமது உரைநடையில் எழுதுக.

   ....

4. எந்த உழைப்பினால் நீங்காத பட்டினியாயிருந்தனர்?

   ....

5. இக்கவிதையிலிருந்து நீர் அறிந்த பாடம் யாது?

   ....

5. சந்தர்ப்பம் கூறுக.

1. 'ஓ! பலவேளை நீ வருவாய்!'

   யாரால் : ....

   யாருக்கு : ....

   எச்சந்தர்ப்பத்தில் : ....

2. 'நான் மற்றப் பிள்ளைகளைப் பார்ப்பதுவா – இவள்
   பிணி தன்னைப் பார்ப்பதுவா'

   யாரால் : ....

   யாருக்கு : ....

   எச்சந்தர்ப்பத்தில் : ....

3. 'அதட்டல்! ஏ, தங்கம்மா
   எங்கு நீ போகின்றாய்?'

   யாரால் : ....

   யாருக்கு : ....

   எச்சந்தர்ப்பத்தில் : ....

23 . கணையாழி

23.2 செயல் நெறி

1. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாம் தவத்தால் செல்வந்தர்கள். நீரோ இந்த நாட்டை ஆள்வதால் செல்வந்தர். இவள் சகுந்தலையோ நம்பால் மிகுந்த அன்புடையள். நன்கு சிந்தித்து சகுந்தலையை மனைவியாக ஏற்பீர். அதற்கு மேல் அவள் நல்வினை எப்படியோ அப்படி நடக்கட்டும். இவ்வாறு என்சார்பில் அரசனிடம் சொல்வாயாக.

குழந்தாய், சகுந்தலை, நீ எப்பொழுதும் மூத்தோர், பெரியோருக்கு பணிவிடை செய். கணவன் கோபித்தாலும் சாந்தமாக நடந்து கொள். ஒரு போதும் கர்வம், செருக்குக் கொள்ளாதே. புகுந்த இடத்தின் பெருமையையும், பிறந்த இடத்துச் சிறப்பையும் எஞ்ஞான்றுங் காத்துக்கொள்...

1. மேற்கூறிய விடயங்களைக் கூறியவர் யார்? ஏன் கூறினார்?

   ....

2. இதில் வந்துள்ள உவமானங்களைக் கூறுக.

   ....

3. நல்வினை என்றால் என்ன?

   ....

4. ஒரு பெண், கணவனிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

   ....

5. தவத்தால் செல்வந்தர்கள் ஆனோர் யாவர்?

   ....

2. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. மலர்கள் கொய்து கூடைக்குள் போட்டனர். இதில் கொய்து என்பது,
   1. பிய்த்து 2. பிடுங்கி 3. வெட்டி 4. ஆய்ந்து
2. கண்ணுவர் ஆச்சிரமத்தை நோக்கி விரைந்தனர். ஆச்சிரமத்தின் எதிர் பதம்,
   1. குடிசை 2. வீடு 3. சிம்மாசனம் 4. அரியாசனம்.
3. சித்திரப்பாவை போல ஆடாது அசையாது இருந்தது,
   1. சகுந்தலை 2. கௌதமி 3. தோழியர் 4. கண்ணுவர்
4. மனம் வெதும்பி விட்டுப் பிரியாமல் விடை பெறுகிறாள். இதில்,
   1. ஒரு பொருள் 2. ஒரு உறுப்பு 3. ஒரு நினைவு 4. ஒரு உடல்.
5. ஓர் ஏரிக்கரையை அடைகின்றாள். ஏரிக்கரை இருக்குமிடம்,
   1. நதிக்கரை 2. கடற்கரை 3. அருவிக்கரை 4. மலைச்சாரல்.

3. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துத் தருக.

1.	கன்னியர்கள்	....	6.	நல்லாட்சி	....
2.	அனுமதி	....	7.	மனைக்கிழத்தி	....
3.	முனிவர்	....	8.	வேள்வி	....

4. பதி .... 9. செங்கோல் ....
5. சர்வமங்களம் .... 10. கீர்த்தி ....

4. பின்வரும் சொற்களுக்கு உவமானம் கூறுக.

1. நீதி வழிநின்று ....
2. விதிவிலக்கு ....
3. மலர் கொய்து ....
4. மன்றாடி மன்னிப்பு ....
5. சிறிது இரங்கி ....
6. சித்திரப்பாவை ....
7. நல்லசெய்தி ....
8. நீடூழி வாழ் ....
9. மங்கல அலங்காரம் ....
10. வனதேவதை ....

5. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. துருவாச முனிவர் சகுந்தலைக்கிட்ட சாபம் யாது? ஏன் சாபமிட்டார்?
....
2. இக்கதையில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.
....
3. மங்கலப் பொருட்களாகக் கூறப்பட்டவைகள் யாவை?
....
4. கணையாழிக்கு நடந்த சம்பவத்தைக் கூறுக.
....
5. சகுந்தலை மறைந்து விடக் காரணம் எது?
....
6. துஷ்யந்தன் என்பவன் யார்? அவன் ஏன் சகுந்தலையை மறந்தான்?
....
7. சார்ங்கரவன் துஷ்யந்தனிடம் கூறிய கண்ணுவரின் செய்தி யாது?
....
8. துஷ்யந்தன் சகுந்தலையின் உண்மை நிலையறிந்து பின் நடந்து கொண்ட சம்பவத்தைக் கூறுக.
....
....
....
....
....

புத்தாயிரமாமாண்டின்

BRIGHT - இன்

வெளியீடுகள்

- ☆ தமிழ் மொழியும் இலக்கியமும்
- ☆ சைவ நெறி
- ☆ சுகாதாரமும் உடற் கல்வியும்
- ☆ வாழ்க்கைத் தேர்ச்சி 7-8-9
- ☆ விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்
- ☆ தமிழ் மொழி இலக்கியம் - பாட்டுக்கு பொருள்
- ☆ தமிழ் மொழி இலக்கியம் - சந்தர்ப்பம் கூறல்
- ☆ THE WORLD THROUGH ENGLISH WORK BOOK
- ☆ இஸ்லாம்
- ☆ கட்டுரை மஞ்சரி
- ☆ சமூக கல்வியும் வரலாறும்

ISBN - 955 - 8332 - 02 - X

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.

S-27 FIRST FLOOR, P.O. BOX NO: 162,
COLOMBO CENTRAL SUPER MARKET
COMPLEX COLOMBO - 11. TELE: 434770